වාර්ෂික වාර්තාව සහ ගිණුම්

ஆண்டறிக்கையும் கணக்குகளும்

# ANNUAL REPORT & ACCOUNTS

01-04-2023---31-03-2024



ජාතික ලුණු සමාගම

தேசிய உப்பு நிறுவனம்

NATIONAL SALT LIMITED

# ජාතික ලුණු සමාගම
# தேசிய உப்பு நிறுவனம்
# NATIONAL SALT LIMITED

කර්මාන්ත අමාත්‍යාංශය

கைத்தொழில் அமைச்சு

Ministry of Industries

රජයට අයත් සමාගමකි

**அரசுக்குச் சொந்தமான கம்பனி**

**Government Owned Company**

## වාර්ෂික වාර්තාව සහ ගිණුම්

## ஆண்டறிக்கையும் கணக்குகளும்

## ANNUAL REPORT & ACCOUNTS

## 2023.04.01 – 2024.03.31

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தவிசாளரின் மீளாய்வு | 01-02 |
| 2. | பொது முகாமையாளரின் செய்தி | 03-04 |
| 3. | கூட்டிணைத்தல் பற்றிய தகவல்கள் | 05 |
| 4. | அறிமுகம் | 06-07 |
| | 4.1கம்பனியின் கட்டமைப்பு | 08 |
| | 4.2 உற்பத்தி வேலைத்தளங்கள் பற்றிய விபரம் | 09 |
| | 4.3 உற்பத்தித் தகவல்கள் | 09 |
| | 4.4 விற்பனை | 09 |
| 5. | அபிவிருத்தி செய்வதற்கு தற்போது காணப்படுகின்ற முக்கிய துறைகள் | 10 |
| | 5.1 இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்களவு ஏற்பாடுகள் | 11 |
| 6. | நிதிப் பொழிப்புரை | 12-13 |
| 7. | பிரதான பதவிநிலை அலுவலர்களின் விபரம் | 14-15 |
| 8. | நிறுவன ஒழுங்கமைப்பு | 16 |
| 9. | பணிப்பாளர்களின் அறிக்கை | 17-18 |
| 10. | பங்குரிமையாளர்களுக்கான சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை | 20-29 |
| 11. | கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் 2023/2024 | 30-80 |

# 1. தலைவரின் அறிக்கை – வருடாந்தப் பொதுக் கூட்டம் 2023/2024

## வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனி

வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனியின் தற்போதைய தலைவர் என்ற வகையில், உங்கள் அனைவரையும் 2023/2024 நிதி ஆண்டுக்கான வருடாந்த பொதுக் கூட்டத்துக்கு வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைவதோடு 2024 மார்ச்சு மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகளையும் சமர்ப்பிக்கின்றேன்.

மீளாய்வாண்டு காலப்பகுதியில், வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனி ரூபா 502 மில்லியன் தொகை புரள்வை அடையப் பெற்றுள்ளதுடன், வரிக்கு முந்திய இலாபமாக ரூபா 287 மில்லியனை பதிவு செய்ததோடு. இது 2022/2023 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 48% வீத அதிகரிப்பாகும்.. 2023/2024 ஆண்டுக்காலப்பகுதியில் எமது உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கையின் அடைவுகள் பெருமைப்படத்தக்களவு முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளதுடன், இலங்கை அரசாங்கத்திற்கு வரியாக கம்பனி ரூபா 89 மில்லியன்களை பங்களிப்புச் செய்தது. .இலங்கையில் நடைமுறைசாத்தியமான உப்பு உற்பத்தி கைத்தொழிலை விருத்திசெய்வதற்கும் அதை நிலையாகப் பேணுவதற்கும் வசதிகளை செய்துகொடுப்பவர் என்ற வகையில் இக்கம்பனி செயற்பட்டு வந்துள்ளது என்பதனைப் பங்குதாரர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். நிதி ஆண்டுக் காலப்பகுதியில் கம்பனி தலா பங்கொன்றிற்கான வருமானமாக ரூபா 662 தொகையை பதிவுசெய்ததோடு இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 41 வீத அதிகரிப்பாகும்.

2024 மார்ச்சு 31 ஆம் திகதியன்று உள்ளவாறு இவ்வருடத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஆளணி 167 ஆக இருந்ததோடு அதில் நிரந்தர ஆளணி 63 ஆக இருந்ததோடு. எஞ்சிய ஆளணியானது ஒப்பந்த/ அமைய மற்றும் பருவகால அடிப்படையில் தேவையானவாறு நிரப்பப்பட்டது. இந்தப் பாரிய வெற்றிக்கு அனைத்து மட்டங்களிலுமுள்ள எமது ஊழியர்களிடமிருந்தும் நாம் தொடரான அர்ப்பணிப்பையும் ஒத்துழைபபையும் பெற்றுக்கொண்டோம் என்பதை நான் மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றேன்.

”ஆணையிறவு மேசை உப்பு” பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புடன் இறுதி சந்தைக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனி அதன் சுயமான பெறுமதி சேர்க்கப்பட்ட பிரேரணைகளுடன் சந்தையில் அதன் இருப்பை விரிவுபடுத்துகிறது. மேலும், ஆணையிறவு உப்பளத்தில் உற்பத்தி திறனை

விரிவுபடுத்துதல் மற்றும் இரண்டு உப்பளங்களிலும் செயல்பாட்டு செயல்திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றில் பணியாற்றி வருகிறது. எதிர்காலத்தில் வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனியின் நிலையான முன்னேற்றத்தைத் தொடர்வதை உறுதி செய்வதற்காக காலநிலை தன்மைகள் மற்றும் சந்தை சக்திகளில் ஏற்படும் மாற்றங்கள் உள்ளிட்ட உப்பள செயல்பாட்டில் உள்ள ஆபத்து கூறுகளை நாங்கள் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம். வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனியின் ஆளுகை சபை மேசை உப்பு பொறித்தொகுதியின் முழு திறன் சார்ந்த செயல்பாட்டை உறுதி செய்வதற்கும் பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பெனி லிமிடெட்டுக்கு நிலையான விநியோகத்தை உறுதி செய்வதற்கும் குறிஞ்சத்தீவு உப்பளத்தை புனரமைப்பதில் கவனம் செலுத்துகின்றது.

தேசிய உப்புக் கம்பனிக்கு கைத்தொழில் அமைச்சு, அரச தொழில்முயற்சிகள் திணைக்களம், நிதி அமைச்சு, ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச அதிகாரசபைகளினால் மற்றும் எமது நம்பிக்கைக்குரிய நுகர்வோர் ஆகியோரினால் எமக்கு வழங்கப்படுகின்ற தொடரான ஆதரவு மற்றும் ஊக்குவிப்ப குறித்து நான் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**நன்றி**

**கயான் வெல்லவ**
**தவிசாளர்**

## 2. பொது முகாமையாளரின் வாழ்த்துச்செய்தி

வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு எனது வாழ்த்துச் செய்தியை தெரிவிக்க கிடைத்தமையை இட்டு நான் பெருமிதமடைகின்றேன். வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனியானது 2023 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து 2024 மார்ச்சு 31 ஆம் திகதி வரையான நிதியாண்டுக் காலப்பகுதியில் அதன் தொழிற்பாடுகளை முன்னேற்றகரமானதாக தொடராக மேற்கொண்டு இலாபங்களைப் பெற்றுக் கொண்டது என்பதை அறிக்கையிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்காலப்பகுதியில் நாம் மன்னார் உப்பளம் மற்றும் ஆணையிறவு உப்பளம் என்பவற்றை வெற்றிகரமாக இயங்கச் செய்தோம். ஆணையிறவு உப்பளத்தின் நிருவாகமானது 2015 சனவரி 15 ஆம் திகதிய 1897/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் 2015 பெப்ருவரி மாதம் முதல் மீண்டும் வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனியின் கீழ் கொண்டுவரப்பட்டது. ஆணையிறவு உப்பளத்தின் 90 வீதமான புனரமைப்புப் பணிகள் திறைசேரியின் நிதி உதவியுடனும் வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனியானது சொந்த நிதியினது முதலீட்டுடனும் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றது.

2023∴2024 நிதியாண்டில் நாம் மன்னார் உப்பளத்தில் மதிப்பிடப்பட்ட 5500 மெற்றிக் தொன் உப்பு உற்பத்திக்கு இசைவாக 4099 மெற்றிக் தொன் உப்பை உற்பத்தி செய்ய முடிந்ததுடன், மேலும் ஆணையிறவு உப்பளத்தில் மதிப்பிடப்பட்ட 18,000 மெற்றிக் தொன் உப்பு உற்பத்திக்கு இசைவாக 10,676 மெற்றிக் தொன் உப்பை உற்பத்தி செய்யமுடியுமாயிருந்துள்ளது. சீரற்ற காலநிலை நிலைமைகள் காரணமாக உற்பத்தி மோசமாக பாதிக்கப்பட்டது. மன்னார் உப்பளத்தின் மதிப்பீடப்பட்ட உப்பு அளவான 2,386 மெற்றித் தொன் மற்றும் ஆணையிறவு உப்பளத்தின் மதிப்பீடப்பட்ட உப்பு அளவான 9,688 மெற்றிக் தொன் உப்பும் சாதாரண உப்பாகவும், அயடீன் கலந்த 1 கி.கி பக்கட்டுகள் அளவு உப்பாகவும், வர்த்தக ரீதியான உப்பாகவும் மற்றும் அரைத்த உப்பாகவும் பல்வேறு வகைகளில் சந்தையில் விற்பனை செய்யப்பட்டது. ஆண்டுக்கான மொத்த தேறிய விற்பனைப் புரள்வு ரூபா 502,573,939.00 தொகை ஆக இருந்ததுடன் கணக்காய்வுசெய்யப்பட்ட கணக்ககளின் பிரகாரம் இவ்வாண்டில் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 287,482,849.00ஆகும்.

இந்த கம்பனி நியாயமான விலைகளில் உப்பினை விற்பனை செய்ததன் மூலம் தனது நுகர்வோருக்கு சிறந்த சேவையினை வழங்கியதோடு மாத்திரமன்றி, இவ்வாண்டுக் காலப்பகுதியில் அரசாங்கத்திற்கான வருமான வரியாக ரூபா 89.2 மில்லியன் தொகையை

செலுத்தியுள்ளதுடன் திறைசேரிக்கான நியாயமான பங்கிலாபத் தொகையையும் எதிர்காலத்தில் செலுத்தும்.

2026 ஆம் ஆண்டளவில் சந்தைப் பங்கில் 14 சதவீதத்தினை அடைந்துகொள்வதன் மூலம் இலங்கையின் பிரதானதொரு உப்பு உற்பத்தியாளராக வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனி திகழ வேண்டும் என்ற உபாயமுறை இலக்கையும் கொண்டுள்ளது.

இந்த நிதியாண்டில் தற்போதைய நிறுவனத்தின் பணியாளர்கள் இலக்கினை அடைந்து கொள்வதற்கான பயிற்சி, பாராட்டுதல்கள், தேவையான அடிப்படை வசதிகளை வழங்குதல், போனஸ் கொடுப்பனவுகள் மற்றும் இதுபோன்ற பல்வேறு வித்தியாசமான வேலைத் திட்டங்களின் ஊடாக வலுவூட்டப்பட்டுள்ளனர்.

இறுதியாக, வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனியின் வெற்றிக்காக தங்களது பங்களிப்புக்களை நல்கிய கௌரவ அமைச்சர், கைத்தொழில் அமைசசின் செயலாளர், தலைவர், பணிப்பாளர் சபை மற்றும் எமது அர்ப்பணிப்புள்ள பதவியணியினர் அனைவருக்கும் எனது உளப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எம்.ஜே.துவான் மன்ஸில்**
**பொது முகாமையாளர்**

| 3. கூட்டாண்மை தகவல்கள் | |
|---|---|
| **கம்பனியின் பெயர்** | வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனி (அரசுக்கு உரித்தான கம்பனி) |
| **நிரல் அமைச்சு** | கைத்தொழில் அமைச்சு. |
| **தலைமை அலுவலகம்** | இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05. |
| **மன்னார் உப்பளம்** | கிறேன்ட் பஸார், மன்னார். |
| **ஆணையிறவு உப்பளம்** | ஏ 9 வீதி, ஆணையிறவு, கிளிநொச்சி |
| **கம்பனியின் பதிவு இல.** | (என் (பீ பி எஸ்) 942), புதிய இல. பீபி 1078<br>[N(PBS)942] New No. PB 1078 |
| **பங்குதாரர்கள்** | பொதுத் திறைசேரி |
| **பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்** | 1.04.01 தல் 2024.03.31 வரை<br>1. திரு டி.ஆர். அனுர பண்டார – தவிசாளர்<br>2. திரு எல்.பி. வெவலகே – திறைசேரி பிரதிநிதி<br>3. திரு டப்ளியு.எம்.என். ஜயந்த புஸ்பகுமார<br>4. திரு டப்ளியு. ஆ. ஜனகா. ஆர். விக்கிரமசிங்க<br>5. திரு ஆர்.எம். ஸ்ரீலால். திலகரத்ன<br>6. திரு சேபால செனவிரத்ன<br>7. திரு எச்.எம்.தம்மிக கே. பிரேமதிலக்க 2023.12.04 வரை<br>8. திரு எம்.எம்.என்.ஆர்.கே. குணதிலக்க 2023.12.04 முதல் |
| **அவதானிப்பாளர்** | திருமதி எஸ் என் பாலசுப்பிரமணியம் - அவதானிப்பாளர் - 2023 மே வரை |
| **சபைச் செயலாளர்** | கோபரேட் எபயார்ஸ் பிரைவட் லிமிடட் 2023 செப்தெம்பர் வரை<br>திரு டபிள்யு.எச்.ஏ.டபிள்யு.டபிள்யு. குலவன்ச 2023 செப்தெம்பர் முதல் 2024 சனவரி வரை |

| | |
|---|---|
| | திரு எச்.எல். விபுல சில்வா 2024 பெப்ருவரி முதல் |
| **கணக்காய்வாளர்** | அரசாங்க கணக்காய்வாளர்கள்<br>தேசிய கணக்காய்வு அலுவலகம், இலங்கை |
| **வங்கியாளர்** | இலங்கை வங்கி |

# 4. அறிமுகம்

## 4.1 கம்பனி பற்றிய அறிமுகம்

இலங்கையில் உப்பு உற்பத்தியில் வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனி, மிக நீண்டகால வரலாற்றைக் கொண்டுள்ளது. கம்பனியானது சாதாரண உப்பு, அயடின் கலந்த உப்பு, தூளாக்கிய உப்பு மற்றும் வணிகசார் உப்பு வகைகளை உற்பத்தி செய்து வருகின்றது. பிரதான உப்பு உற்பத்தி பகுதிகள் மன்னார் மற்றும் ஆனையிறவு (கிளிநொச்சி) பிரதேசங்களில் அமைந்துள்ளதுடன் அதன் நிருவாக அலுவலகம் கொழும்பில் அமைந்துள்ளது.

உப்புக் கூட்டுத்தாபனம் 1938 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இது பல்வேறுபட்ட நிருவாகக் கட்டுப்பாடுகளின் கீழ் நிருவகிக்கப்பட்டு வந்துள்ளதுடன், இறுதியாக 2001 ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்ட மாந்தை உப்பு கம்பனி எனப் பெயரிடப்பட்டதோடு 2021 யூன் மாதத்தில் வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனி என மீள்பெயரிடப்பட்டு, தற்போது கைத்தொழில் அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

இந்நாட்டில் ஏனைய பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் ஏனைய உப்புகளுடன் ஒப்பிடுகையில் மிகச்சிறந்த உப்பாக (96.5.% Nacl சோடியம் குளோரைட்) அங்கீகரிக்கப்படுகின்றது. தற்போது தலா வருடத்திற்கு மன்னார் உப்பளம் 6,000 மெற்றிக் தொன் மூல உப்பை உற்பத்திசெய்யும் திறனையும் ஆனையிறவு உப்பளம் 18,000 மெற்றிக் தொன் உப்பையும் உற்பத்திசெய்யும் திறனையும் கொண்டதாக உள்ளன.

வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனி தேசிய இயற்கை வள பயன்பாட்டு மத்திய நிலையமாக மாத்திரமன்றி மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வாழும் எண்ணற்ற பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழில் வாய்ப்பினையும் வழங்குகின்றது. தற்போது இங்கு 63 நிரந்தர உத்தியோகத்தர்களும் 7 ஒப்பந்த/அமைய அடிப்படையிலான ஊழியர்களையும் 242 பருவகால அடிப்படையிலான ஊழியர்களும் நிறுவனத்தில் பணிபுரிகின்றனர்.

வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனியானது திறைசேரி மற்றும் ஏனைய அரசாங்க/ தனியார் நிறுவனங்கள் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்களைக் கொண்ட சபையினால் நிர்வகிக்கப்படுவதுடன், அது கைத்தொழில் அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் செயற்படுகின்றது. கம்பனி அமைச்சின் கூட்டுத்தாபனப் பிரிவினால் கண்காணிக்கப்பட்டு,

அதன் அபிவிருத்தி, சட்ட மற்றும் பொறுப்புக்கூறத்தக்க விடயங்களுக்கு வசதியளிக்கின்றது. இது ஒரு அரசதொழில் முயற்சியாண்மையாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், வரையறுக்கப்பட்ட கம்பனி ஒழுங்கு விதிகளையும் பின்பற்றுகின்றது.

அதேவேளை, நிறுவனம் உற்பத்தியின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை தராதர நிறுவனத்தினால் சான்றுபடுத்தப்பட்டுள்ளதுடன், கம்பனி தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் கணக்காய்வுசெய்யப்பட்டு வருகின்றது.

## வரலாற்றுக் கண்ணோட்டம்

| ஆண்டு | | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|
| **இருந்து** | **வரை** | |
| 1938 | 1965 | உப்புத் திணைக்களம் |
| 1966 | 1990 | இலங்கை தேசிய உப்பு கூட்டுத்தாபனம் |
| 1991 | 1996 | லங்கா சோல்ட் லிமிடெட். |
| 1997 | 2001/செப். | மன்னார் அரசாங்க அதிபரின் கீழான மன்னார் உப்பளம் |
| 2001/ஒக்டேபர் | 2021 யூன் | மாந்தை சோல்ட் லிமிடெட். (வடக்கு மாகாண உப்பளங்கள்) |
| 2021 யூன் | இன்று வரை | வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனி (வடக்கு மாகாண உப்பளங்கள்) |

### நோக்கு



வர்த்தகத்தின் தன்மைக்கு அமைவாக கம்பனியானது பின்வரும் தொலைநோக்கை கொண்டுள்ளது.

**“இரசாயன மற்றும் ஏனைய படிமுறைகளுடன் இணைந்துள்ள இயற்கை வளங்களை ஆராய்வதன் மூலம் வடக்கு மாகாணத்தில் காணப்படும் உப்பினை அடிப்படையாகக் கொண்ட தொழில் முயற்சியை அபிவிருத்தி செய்வதுடன் அதனால் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்”.**

### செயற்பணி

கம்பனியின் செயற்பணி பின்வருமாறாகும்.

**“உப்பளங்களை இயங்கச் செய்து, உப்பு மற்றும் உப உற்பத்திகளை உற்பத்தி செய்தல், பெறுமதி சேர்த்தல் மற்றும் சந்தைப்படுத்தல்.”**

## 4.2 உற்பத்தி இடங்கள் பற்றிய விபரங்கள்

### அ) மன்னார் உப்பளம்

மன்னார் உப்பளத்தில் மொத்தமாக 163 ஏக்கர் பகுதியில் உப்பு உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. வருடாந்தம் சராசரியாக 6,000 மெற்றிக் தொன் உப்பு உற்பத்தி செய்யப்படுவதுடன், இது இலங்கையில் மேற்கொள்ளப்படும் மொத்த உப்பு உற்பத்தியில் 3.3 சதவீதமாகும். இது இலாபமீட்டும் நிறுவனம் என்ற வகையில் அதன் சில அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு செயற்பாடுகள், ஊழியர் சம்பளம் மற்றும் நலநோம்புகை என்பன இதன் இலாபத்தினூடாக நிருவகிக்கப்படுகின்றன.

### (ஆ) ஆணையிறவு உப்பளம்

ஆணையிறவு உப்பளத்தின் மொத்த ஒதுக்கப்பட்ட நிலப் பிரதேசம் 750 ஏக்கர்களாக உள்ளதுடன், தொழிற்பாட்டு பகுதி 550 ஏக்கர்களாக இருப்பதோடு வருடாந்த சராசரி உற்பத்திக் கொள்ளளவு 23,000 மெற்றிக்தொன்களாகும். உப்பளம் சுமார் 90 சதவீதம் வெற்றிகரமாக புனரமைக்கப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டு முதல் உற்பத்தி செயன்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2019/20 ஆண்டு காலப்பகுதியில் 16,089 மெற்றிக்தொன் கொள்ளளவு உப்பு உற்பத்தி செய்யப்பட்டது.

இரண்டு உப்பளங்களும் தற்போது பொதுவான உப்பை தயாரித்து வருவதோடு எதிர்காலத்தில் செம்மைப்படுத்தல் மற்றும் மேசை உப்பு பொறிகளை பொருத்தி பெறுமதி சேர் பதனிடலை பாரிய அளவில் மேற்கொள்வதற்கு தயாராகி வருகின்றன.

## 4.3 உற்பத்தி தொடர்பான விபரங்கள்

| உப்பளம் | 2018/2019 | 2019/2020 | 2020/2021 | 2021/2022 | 2022/2023 | 2023/2024 |
|---|---|---|---|---|---|---|
| மன்னார் | 6249 | 6683 | 2,786 | 2378 | 2245 | 4099 |
| ஆணையிறவு | 10314 | 16089 | 8,496 | 5283 | 6288 | 10,676 |
| மொத்தம் | **16,563** | **22772** | **11,282** | **7661** | **8533** | **14,775** |

## 4.4. விற்பனைகள்

| ஆண்டு | விற்பனைகள் (மெ.தொ) | வருமானம் (மில்) ரூ |
|---|---|---|
| 2016/2017 | 3337 | 93.8 |
| 2017/2018 | 6094 | 83.7 |
| 2018/2019 | 16,146 | 155.38 |
| 2019/2020 | 13,063 | 103.47 |
| 2020/2021 | 23,484 | 201.56 |
| 2021/2022 | 14312 | 249.05 |
| 2022/2023 | 8,866 | 343.14 |
| 2023/2024 | 12,074 | 502.57 |

# 5. உத்தேச எதிர்கால அபிவிருத்தி பொறித்தொகுதி

### அ) மன்னார் உப்பளம்

1) கம்பனியில் மணித்தியாலத்துக்கு 2 மெற்றிக்தொன் உப்பினை உற்பத்தி செய்யத்தக்க கொள்ளளவுடன் பொறித்தொகுதியொன்று பொருத்தப்பட்டுள்ளதுடன், தற்போது பொதியிடல் பணி ஆரம்பிக்கப்பட்டு மாவட்ட விநியோகத்தர்கள் / மொத்தக் கொள்வனவாளர்கள் ஊடாக விற்பனை செய்வது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கம்பனி ஒரு வருடத்திற்கு 3000 மெற்றிக் தொன் உப்பு பொதியிடும் செயற்பாட்டை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருவதோடு அதன்பிரகாரம் சந்தைப்படுத்தல், மற்றும் விற்பனை அலகை விருத்திசெய்யும் செயற்பாட்டிலும் ஈடுபட்டுள்ளது.

மேலும் மேசை உப்பு பொறித்தொகுதியொன்றினை தற்போதுள்ள பொறித்தொகுதியுடன் இணைந்து அதனை நவீனமயப்படுத்துவதன் மூலம் மேசை உப்பு தயார் செய்வதற்கும் திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

1) மன்னார் நிருவாக பணிகளுக்கான அலுவலக கட்டிடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

2) மன்னார் உப்பளத்திற்கான களஞ்சியக் கட்டிடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

### ஆ) ஆனையிறவு உப்பளம்

1. 650 ஏக்கர் காணியில் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்காக முழுகொள்திறனுடன் உப்பளத்தை புனரமைப்புச் செய்தல்.

2. மணிக்கு 5 மெற்றிக் தொன் (5MT/H) கொள்ளளவைக் கொண்ட மேசை உப்பு உற்பத்திப் பொறித்தொகுதியை தாபிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 5.1 இந்த அபிவிருத்தி செயற்பாடுகள் மூலமான குறிப்பிடத்தக்க வெளியீடுகள்

- **சந்தை விரிவாக்கம் மற்றும் வியாபாரத்துக்கான வாய்ப்புக்கள்**

  புதிய பொறித்தொகுதியினால் மேற்கொள்ளப்படும் பளிங்கு உப்பு தயாரிப்பு மற்றும் தூள் உப்பு தயாரிப்பு மற்றும் விற்பனையானது சந்தையில் நுழைவதற்கும் வியாபாரத்தை விஸ்தரிப்பதற்கும் உதவியாக அமையும் என்பதுடன் அது சந்தையில் இந்த கம்பனிக்குள்ள சாத்தியவளதன்மையை உறுதிப்படுத்தும்.

- **இருப்புக்களை வைத்திருக்கும் காலஎல்லை குறைவடைந்தமை**

  அதிகரித்த மற்றும் விரைவான விற்பனை காரணமாக சேமித்து வைத்தல் மற்றும் கையிருப்பில் வைத்தல் கால அளவு குறைவடையும்.

- **தோழில்வாய்ப்புக்கள் உருவாக்கப்படல்**

  உற்பத்தி மற்றும் விநியோகச் செயற்பாடுகளை விஸ்தரிக்கப்படுவதன் மூலம் புதிய தொழில்வாய்ப்புக்கள் உருவாக்கப்படும். மேலும் உள்ளூர் பொருளாதார அபிவிருத்திக்கும் இது பங்களிப்புச் செய்யும்.

- **மேம்படுத்தப்பட்ட ஊழியர் நலன்புரி**

  இலாபத்தினை அதிகரிப்பதானது ஊழியர்களுக்கான அதிக நலன் வசதிகளையும் நலனோம்புகையையும் ஏற்படுத்த வழிவகுக்கும். அவ்வாறே, திருப்திகரமான மற்றும் ஊக்குவிக்கப்பட்ட ஊழியப்படையணியையும் உருவாக்கும்.

- **துர நியமங்களுக்கு ஏற்புடையதாதல்**

  புதிய பொறித்தொகுதிகள் இலங்கை தராதர நிறுவனத்தின் தரநியமங்களைப் பூர்த்தி செய்வதுடன் தொடர்ந்தும் தரம் பேணப்பட்டு, ஒழுங்குறுத்தல் அம்சங்களுக்கும் இணங்கியிருக்கும்.

- **பொது மக்கள் சுகாதாரத்துக்கான பங்களிப்பு**

  கிராமப்புற சந்தைகளில் உப்பை நியாயமான விலைக்கு கிடைக்கச் செய்வதன் மூலம் அயடீன் குறைபாட்டினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் நோய்களையும் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்ய முடியும்.

❖ **அரசாங்க வருமானம் அதிகரித்தல்**

நிறுவனம் வளர்ச்சியடைவதன் காரணமாக திறைசேரிக்கு குறிப்பிடத்தக்களவு பங்கிலாபம் வழங்கப்படுவதுடன், அரசாங்கம் பெறுமதிசேர் வரி (VAT) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பல் வரி (NBT) என்பன செலுத்தப்படுவதனால் இறுதியாக பொதுமக்களுக்கு அனுகூலங்களை பெற வழியமைக்கும்.

## 6. முக்கிய நிதிசார் விபரங்கள்

| **மார்ச்சு 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கானது 31st March** | **அலகு** | 2023/2024 | 2022/2023 | 2021/2022 | 2020/2021 | 2019/2020 |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி | மெ.தொ. | 14,775 | 8,533 | 7,661 | 11,283 | 22,772 |
| விற்பனைகள் | மெ.தொ. | 12,074 | 8,866 | 14,312 | 23,484 | 13,063 |
| வருமானம் | ரூபா | 502,573,939 | 343,140,970 | 249,051,040 | 201,568,231 | 103,473,982 |
| மொத்த இலாபம் | ரூபா | 285,041,080 | 175,379,118 | 132,998,887 | 72,039,111 | 19,170,216 |
| தேறிய இலாபம் | ரூபா | 198,229,496 | 134,806,255 | 109,940,047 | 60,170,921 | 12,796,333 |
| **தேறிய சொத்துக்கள்** | | | | | | |
| மொத்த நடைமுறையல்லாத சொத்துகள் | ரூபா | 318,550,188 | 141,149,360 | 132,385,413 | 276,402,270 | 149,768,539 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | ரூபா | 504,456,962 | 442,553,826 | 306,829,638 | 74,059,721 | 146,737,592 |
| குறைப்பு – நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | ரூபா | (30,110,766) | (26,671,517) | (11,901,537) | (10,003,783) | (9,296,086) |
| குறைப்பு – நடைமுறை பொறுப்புக்கள் | ரூபா | (110,954,380) | (63,356,504) | (27,177,932) | (18,712,426) | (12,657,428) |
| | | **681,942,004** | **493,675,165** | **400,135,582** | **321,745,782** | **274,552,617** |
| **பங்குதாரர்களின் நிதி** | | | | | | |
| வினியோகிக்கப்பட்ட பங்கு மூலதனம் | ரூபா | 30,000,000 | 30,000,000 | 30,000,000 | 30,000,000 | 30,000,000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| ஒதுக்கங்கள் | ரூபா | 651,942,003 | 463,675,165 | 370,135,582 | 291,745,782 | 244,552,617 |
| மொத்த உரிமையாண்மை | | 681,942,003 | 493,675,165 | 400,135,582 | **321,745,782** | **274,552,617** |
| **அரசாங்கத்துக்கான வருமானம்** | | | | | | |
| வருமான வரி | ரூபா | 89,253,353 | 58,065,641 | 21,051,885 | 9,997,609 | 498,090 |
| | | | | | | |
| **ஒரு பங்கிற்கான உழைப்பு** | ரூபா | 662 | 470 | 366.46 | **200.56** | **42.65** |

**7. பிரதான பதவிநிலை அலுவலர்கள் பற்றிய விபரம்**

| பெயர் | பதவி | தகைமைகள் | சேவைக்காலம் - மா.உ.லி |
|---|---|---|---|
| திரு. எம்.ஜே. துவான் மன்ஸில் | பொது முகமையாளர் | பீஎஸ்சீ, எம்பீஏ, எச்ஆர்எம். டீப்இன் இங் ஏஏரீ -1 | 2014 செப். முதல் |
| திரு ஆர்.வி.வினோகரன் | நிதி முகாமையாளர் | ஏசீஎம்ஏ | 2017 சனவரி முதல் |
| திரு.ஏ.கிசோதரன் | முகாமையாளர் - உப்பளம் | பீஎஸ்.சீ /பீஜீடி | 2008 ஏப்ரல் முதல் |
| திரு.டி.ஜே.எச்.எஸ் புஸ்ப குமார | உதவி முகாமையாளர் - நிதி | சீஏஎஸ்எல் (இடைநிலை) | 2019 பெப். முதல் |
| திரு. எம்.எவ். பைசால் | உதவி முகாமையாளர் - உப்பளம் | இயந்திரப் பொறி. டீப்ளோமா | 2010 நவம் முதல் |
| திருமதி. எஸ்.ஜே.ஜினதாச | உள்ளக கணக்காய்வாளர் | ஏஏரீ மட்டம் 1 மற்றும் 2. மற்றும் மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா | 2012 ஏப்ரல் முதல் |
| திரு. ஈ. விஜயன் | உதவி முகாமையாளர் - உப்பளம் | க.பொ.த. உயர் தரம் | 2002 ஏப்ரலில் முதல் |
| திரு. ஆர்.எம்.எம்.சீ. ரத்நாயக்க | உதவி முகாமையாளர் - உப்பளம் | தே.தொ.த. மட்டம் 05 10 வருட அனுபவம் | 2023 மே 15 முதல் |
| திரு வீ. சுயந்தன் | உதவி முகாமையாளர் - உப்பளம் | விஞ்ஞானப் பட்டம் | 2023 யூன் 01 முதல் |
| திரு டபிள்யு.ஏ.கே.வீ.சீ. வன்னிஆரச்சி | முகாமையாளர், கிரயக் கணக்கீடு | ஐசீஏஎஸ்எல், மத்திய நிலை, ஏ.ஏ.ரீ. இறுதிப் பரீட்சையில் சித்தி | 2023 யூன் 06 முதல் |
| திரு கயந்த திலகரத்ன | முகாமையாளர், உப்பளம் | விஞ்ஞானப் பட்டம் | 2023 யூன் 06 முதல் |
| திரு ஜீ.என்.எஸ். பெர்ணாந்து | முகாமையாளர், நிருவாகம் | வியாபார நிருவாகம் பற்றிய பட்டம் | 2023 செப்தெம்பர் 01 முதல் |

| | | | |
|---|---|---|---|
| திரு டபிள்யு.எச்.ஐ.ஆர். டி சில்வா | முகாமையாளர், நிதி | ஐசீஏஎஸ்எல், மத்திய நிலை, | 2023 நவம்பர் 02 முதல் |
| திரு எஸ்.எம். சன்பர் | உதவி முகாமையாளர், உப்பளம் | விஞ்ஞாபனப் பட்டம் | 2023 நவம்பர் 30 முதல் |

# 8. நிறுவனசார் ஒழுங்கமைப்பு



# 9. பணிப்பாளர்களின் அறிக்கை

இக்கம்பனியின் பணிப்பாளர்கள் 2024 மார்ச்சு 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையுடனும், வருமானக் கூற்றுடனும் தமது அறிக்கையினைச் சமர்ப்பித்துள்ளனர்.

**பிரதான செயற்பாடுகள்**

மீளாய்வின் கீழான ஆண்டில் இக்கம்பனியின் பிரதான செயற்பாடுகளாக உப்பு தயாரித்தலும், விற்பனை செய்வதும் காணப்பட்டது.

**நிதி பற்றிய விசேட குறிப்புக்கள்**

**2024 மார்ச்சு 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டுக்கானது**

| | **ரூபா** |
|---|---:|
| மொத்தப் புரள்வு | 502,573,939.00 |
| **மொத்த இலாபம்** | 285,041,080.00 |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | 287,482,849.00 |
| **வரிக்குப் பின்னரான இலாபம்** | **198,229,496.00** |
| **ஒரு பங்குக்கான உழைப்பு** | **662** |

## பணிப்பாளர்கள்

2023/2024 ஆண்டுக் காலப்பகுதியில் கம்பனியின் பணிப்பாளர்களாக பின்வருவோர் செயற்பட்டார்கள்:-

1. திரு.டி.ஆர். அனுர பண்டார - தலைவர்
2. திரு. எல்.பி. வெவலகே - திறைசேரி பிரதிநிதி
3. திரு டப்ளியு.ஆ.ே. ஜயந்த புஸ்பகுமார
4. திரு டப்ளியு.எம். ஜானக. ஆர். விக்கிரமசிங்க
5. திரு. ஆர்.எம். ஸ்ரீலால். திலகரத்ன
6. திரு. சேபால சேனவிரத்ன
7. திரு.எச்.எம். தம்மிக கே. பிரேமதிலக்க – 2023.12.04 வரை
8. திரு எம்.எம்.என்.ஆர்.கே. குணதிலக்க - 2023.12.04 முதல்

**பணிப்பாளர்களின் பங்குகள்**

பணிப்பாளர்கள் எவரும் இக் கம்பனியில் எந்த வித பங்குகளையும் கொண்டிருக்கவில்லை.

**ஒப்பத்தங்களில் பணிப்பாளர்களின் ஈடுபாடு**

கம்பனியுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவித ஈடுபாட்டையும் காட்டவில்லை.

**கணக்காய்வாளர்கள்**

கம்பனியின் தற்போதைய கணக்காய்வாளர் இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகமாகும்.

**பணிப்பாளர் சபையின் கட்டளையின் பேரில்,**
**கம்பனி செயலாளர்.**

# கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்

# 2023/2024

# தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. IMT/A/NSL/ 2023-2024/FA 08 திகதி : 2024 டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி

தவிசாளர்,
தேசிய உப்புக் கம்பனி.

**தேசிய உப்புக் கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனியின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றம் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்புரையாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது கட்டளையின் பேரில் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கு அமைய எனது அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள கருத்துக்களுக்கான அடிப்படை எனும் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, கம்பனியின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை, காசுப்பாய்ச்சல் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 13.4 பந்திக்கு அமைய கம்பனியின் இருப்பு, செலவினம் அல்லது தேறிய நிகரப் பெறுமதி ஆகிய பெறுமதிகளில் குறைந்த பெறுமதிக்கு கணிப்பிடப்படல் வேண்டுமாயினும், ரூபா 50,428,449 ஆன இறுதி இருப்பு மீதி வரவு செலவுத்திட்ட அலகுச் செலவினத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் பற்றிய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 17.15 சீ பந்திக்கு அமைய, மீள்மதிப்பீட்டு இலாபம் அல்லது நட்டத்தை கணிப்பீடு செய்யும் போது மீள்மதிப்பீட்டுத் திகதியில் குறித்த சொத்துக்களில் காணப்பட வேண்டியிருந்த பெறுமானத்தை கணிப்பீடு செய்து அப்பெறுமானத்தை விஞ்சும் பெறுமதி மீள்மதிப்பீட்டு இலாபமாக கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டுமாயினும் 2020 ஆம் ஆண்டு அரச கொடையொன்றாக கம்பனிக்கு சாட்டுதல் செய்யப்பட்ட கணக்குகளில் பதிவு செய்யப்படாத பெறுமதி ரூபா 6,828,395 ஆன சொத்துக்கள் மூலதனக் கொடையாக இனங்காணப்படாது 2023 ஆகஸ்ட் 24 ஆம் திகதி ரூபா 4,909,500 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு மேற்படி மீள்மதிப்பீட்டுப் பெறுமதி மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் மற்றும் சொத்துக்களின் கீழ் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இ) கம்பனியின் தலைமை அலுவலகம் பேணிவரப்படுகின்ற கட்டிடத்திற்கு செலுத்தப்பட வேண்டிய வாடகையாக ரூபா 1,800,000 ஆன செலவினம் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் மேற்படி பெறுமதியை உறுதி செய்வதற்கான சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 28.24 பந்திக்கு அமைய குறித்துரைக்கப்பட்ட பயன்கள் திட்டத்தின் செலவினத்தை இனங்காணும் போது காலப்பகுதிக்கான ஆயுட்கால இலாபம் அல்லது நட்டம் வருமானக் கூற்றில் அல்லது வேறு விரிவான வருமானங்களின் கீழ் இனங்காணப்பட வேண்டுமாயினும் கம்பனியினால் ரூபா 411,199 ஆன ஆயுட்கால நட்டம் வருமானக் கூற்றில் செலவினமாகவும், வேறு விரிவான வருமானத்தின் கீழ் இலாபமாகவும் இனங்காணப்பட்டுள்ளதன் காரணமாக மீளாய்வு ஆண்டின் மொத்த விரிவான வருமானம் ரூபா 411,199 இனால் கூடுதலாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) ரூபா 19,302,311 ஆன மீளாய்வு ஆண்டின் ஆரம்ப இருப்பு ரூபா 16,939,123 ஆக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளதன் மூலம் ஆண்டின் இலாபம் ரூபா 2,363,188 இனால் கூடுதலாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வு ஆண்டுக்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 56,736,709 ஆயினும், இது ரூபா 58,216,559 ஆக ரூபா 1,479,850 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டதன் காரணமாக ஆண்டின் இலாபம் மேற்படி தொகையினால் மிகைத்து கணிப்பிடப்பட்டுள்ளது.

(எ) ஆதனம், பொறி, உபகரணங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திச் செலவினத்திற்கு 15 சதவீதமான தேய்வு விகிதம் 15.4 ஆக தேய்மானம் கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக தேய்வுச் செலவினம் ரூபா 385,370 இனால் அதிகமாக மற்றும் சொத்துக்கள் மேற்படி தொகையினால் குறைவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(ஏ) நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள வருமான ஒதுக்கம் மற்றும் வர்த்தக மற்றும் வேறு செலுத்த வேண்டிய நிலுவைகளது பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 561,805,418 ஆயினும் அது சம்பந்தமான குறிப்புக்களுக்கு அமைய அவற்றின் கூட்டுத்தொகைப் பெறுமதி ரூபா 562,363,442 ஆனதனால் ரூபா 558,024 ஆன வித்தியாசம் அவதானிப்புச் செய்யப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். குறித்த கணக்கீட்டு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 கம்பனியின் 2023/2024 ஆண்டறிக்கையில் உள்ளடங்கும் ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதியின் பின்னர் எனக்குப் பெற்றுத் தர எதிர்பார்க்கப்படுகின்ற கம்பனியின் 2023/2024 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது பற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாதுள்ள தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதன் மூலம் கருதப்படுகின்றன. குறித்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துக்கள் மூலம் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், நான் அது பற்றி எந்தவொரு வகையிலுமான உறுதிப்படுத்தலையோ அல்லது கருத்துக்களை வெளியிடுவதோ இல்லை.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்வு சம்பந்தமான எனது பொறுப்பாக இருப்பது மேலே இனங்காணப்பட்டுள்ள ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ள இயலுமாகின்ற போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு விதகமான பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவுக்கு அமைய போதியளவில் பெருத்தமற்றதாக உள்ளதா என்பது பற்றி ஆராய்வதாகும்.

கம்பனியின் 2023/2024 ஆண்டறிக்கையை வாசிக்கும் போது அதன் குறிப்பிடத்தக்களவில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று நான் தீர்மானம் செய்யும் பட்சத்தில் சீராக்கல் செய்வதற்காக நிருவாகத் தரப்பினருக்கு மேற்படி விடயங்களை அறிவித்தல் வேண்டும். மேலும் சீராக்கல் செய்யப்படாத தவறுகள் குறிப்பிடப்பட்டிருப்பின், அவை அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் நான் எதிர்காலத்தில் பாராளுமன்ற சபாபீடத்தில் வைக்கும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தின் மற்றும் நிருவாகத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் தரநியமங்களுக்கு (SMEs இற்கான SLFRS) இணங்க நிதிக் கூற்றுக்களை தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானம் செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
நிதிக் கூற்றுக்களை தயார் செய்யும் போது கம்பனியை தொடர்ச்சியாக பேணிவரும் ஆற்றலை தீர்மானம் செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதுடன், முகாமைத்துவம் கம்பனியை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்ப்பதாயின் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாத பட்சத்தில் நடவடிக்கைகளை நிறுத்திவிட நடவடிக்கை மேற்கொள்ளுமாயின் இன்றேல் தொடர்ச்சியான நிலைத்திருத்தலின் அடிப்படையில் கணக்குப் பதிவு மற்றும் கம்பனியின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பில் பரிசோதிக்கும் பொறுப்பை நிருவகிக்கும் தரப்பினர் ஏற்றுக் கொள்வார்கள்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தமது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணிவரப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை

ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடும் என்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் பற்றிய பொருண்மையான உறுதியற்ற நிலைமை உள்ளதா என்பது பற்றி பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்கு நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் பற்றிய அடிப்படையைப் பயன்படுத்திக் கொள்வதன் ஏற்புடையதன்மை தீர்மானம் செய்யப்பட்டது. பொருண்மையான உறுதியற்ற நிலைமை

காணப்படுவதாக நான் தீர்மானிக்கின்ற சந்தர்ப்பத்தில் நிதிக் கூற்றுக்களில் அது பற்றிய வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், மேற்படி வெளிப்படுத்தல்கள் போதியளவிலானதாக இல்லை எனின் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் பேரில் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் நிறைவு செய்யப்பட முடியும்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமாக உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது மற்றும் வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதம உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி கணக்கீட்டு அலுவலரை அறிவுறுத்தியுள்ளேன்.

## 2. வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திலுள்ள பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள கருத்துக்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்கள் தவிர, 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 163 (2) பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்பதுடன், எனது பரிசோதனைகளின் போது தெரியவந்துள்ளவாறு முறையான நிதி அறிக்கைகளை அதிகாரசபை பேணிவந்திருந்தது என்பது,

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கம்பனி சமர்ப்பித்துள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைவதாக உள்ளன என்பது,

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கடந்த ஆண்டில் நான் சமர்ப்பித்திருந்த சிபாரிசுகள் இந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது,

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் போதியளவிலான விடயங்களின் வரையறைகளுக்குள், பின்வரும் கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்குக் காரணமான எந்தவொரு விடயத்தையும் நான் அவதானிப்புச் செய்யவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கம்பனியின் நிருவாக சபையின் யாராயினும் உறுப்பினர் ஒருவர் கம்பனியுடன் தொடர்புகொண்டு யாதாயினுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாக சாதாரண வியாபார நிலைமைக்கு புறம்பாக செயற்பட்டுள்ளமை.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து யாதாயினும் ஏற்புடைய எழுத்துமூலமான சட்டம் அல்லது கம்பனியின் நிருவாக சபையினால் வெளியிடப்பட்டுள்ள வேறு பொதுவான அல்லது விசேடமான ஏற்பாடுகளுக்கு ஒவ்வாமை இடம்பெறுகின்றவாறு செயற்பட்டுள்ளமை.

| | **சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகளுக்கான தொடர்பு** | **அவதானிப்பு** |
|---|---|---|
| | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் அரசாங்கத்துக்கு உரித்தான தொழில்முயற்சிகளுக்கான நடவடிக்கைகள் கையேட்டின் 6.6 ஆம் பந்தி | மீளாய்வு ஆண்டு தொடர்பான நிதிக் கூற்றுக்கள் 2024 செப்தெம்பர் 27 ஆம் திகதி அதாவது 04 மாத கால தாமதத்தின் பின்னர் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், இந்த அறிக்கையின் திகதி வரையும் ஆண்டறிக்கையின் வரைவு கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) | 2020 சனவரி 27 ஆம் திகதிய PED 01/2020 ஆம் இலக்க நிதி, பொருளாதார மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சின் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பணிப்பாளர்களை புதிய ஆட்சேர்ப்புக்களாக நியமனம் செய்யக்கூடாது எனினும் 2023 ஏப்ரல் 11 ஆம் திகதி கம்பனிக்கு நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மீளாய்வு ஆண்டில் ரூபா 1,597,896 ஆன தொகை சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக திறைசேரி அங்கீகாரம் இன்றி |

| | | |
|---|---|---|
| | | செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2022 டிசம்பர் 21 ஆம் திகதிய PED 08/2022 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | ஊழியர்கள் சேமித்துக் கொண்ட லீவு அடிப்படையில் கொடுப்பனவுகளை செலுத்தும் போது அரச தொழில்முயற்சிகளின் ஊழியர்களுக்கு உரித்தான லீவுகள் 1954 இன் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி அரச தொழில்முயற்சிகள் மூலதனம் மற்றும் /அல்லது மீண்டெழும் செலவினங்களுக்கு பொதுத் திறைசேரியிடம் நிதி பெற்றுக் கொள்ளாதவைகளாக இருத்தல் வேண்டும்.<br>அவ்வாறாயினும் மேற்படி நிபந்தனைகளுக்கு முரணாக வருடாந்தம் ஊழியர்களுக்கு 42 லீவு வழங்கப்பட்டுள்ள போதிலும் மற்றும் கம்பனிக்கு ரூ.மி. 100 ஆன மூலதன கொடை மீளாய்வு ஆண்டில் திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ள போதிலும் சேமித்துக் கொண்ட லீவு மீதான கொடுப்பனவாக நிரந்தர அலுவலர்கள் 59 பேருக்கு ரூபா 764,073 ஆன தொகை செலுத்தப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2024 பெப்ருவரி 28 ஆம் திகதிய PED 01/2024 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி மற்றும் 2022 ஆகஸ்ட் 8 ஆம் திகதிய PED 04/2022 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.5 ஆம் பந்தி | திறைசேரியின் அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஊழியர்கள் 402 பேருக்கு ரூபா 28,510,500 ஆன வருகைக்கான கொடுப்பனவு மற்றும் தவிசாளரின் தங்குமிட வசதிகளுக்காக ரூபா 339,643 ஆன செலவினம் மீளாய்வு ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து அதிகாரசபையின் தத்துவம், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஒவ்வாமை ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய அதிகாரசபையின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறன்மிக்கவாறும் மற்றும் விளைதிறன்மிக்கவாறும் காலப்பகுதிகளுக்குள் குறித்த சட்டங்கள் விதிகளின் பிரகாரம் பெறுகை மேற்கொண்டு பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது.

## 2.3 வேறு விடயங்கள்

(அ) 2024 பெப்ருவரி 28 ஆம் திகதி கணக்காய்வினால் ஆணையிறவு உப்பளத்தில் மேற்கொள்ளப்பட்ட இருப்புப் பரிசோதனைக்கு அமைய மீதி மற்றும் அன்றைய தினத்தின் உற்பத்திப் பதிவேடுகளுக்கு அமைவான மீதிக்கு இடையே ரூபா 13,548,600 ஆன பெறுமதியைக் கொண்ட 408.4 மெ.தொ. (சுமார்) இருப்புக் குறைபாடு அவதானிப்புச் செய்யப்பட்டது.

(ஆ) கம்பனி 2022/2023 ஆண்டுக்கு நிரந்தரமற்ற ஊழியர்கள் 191 பேருக்கு ரூபா 1,499,719 ஆன மிகையூதியக் கொடுப்பனவை மீளாய்வு ஆண்டில் செலுத்தியிருந்த போதிலும், அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய யுத்த சூழல் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிளாய்ப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரித்தான குருஞ்சதீவு (ஆணையிறவு வடக்கு) உப்பளத்தின் உற்பத்தி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், மேற்படி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்காக 2017 டிசம்பர் 12 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதற்கமைய 2022 யூலை 21 ஆம் திகதி அரசாங்க விலைமதிப்புத் திணைக்களத்தினால் இக்காணி ரூபா 205,000,000 ஆன தொகைக்கு விலைமதிப்புச் செய்யப்பட்டு நீண்ட கால குத்தகை உடன்படிக்கை மூலம் கம்பனிக்கு சாட்டுதல் செய்துகொள்வதற்காக வட மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வு ஆண்டின் இறுதி வரையும் சாட்டுதல் செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக உள்நாட்டு உப்பு உற்பத்தியை மேம்படுத்துவதன் மூலம் நாட்டின் தேவைக்கு உப்பு இறக்குமதி செய்வதைக் குறைப்பதற்கு உகந்த நிலையில் மேற்படி உப்பளம் காணப்பட்ட போதிலும் அது தொடர்ந்தும் செயற்படாத நிலையில் காணப்பட்டது.

(ஈ) 2023/2024 ஆண்டில் கம்பனியின் செயற்றிட்டம் பிரதானமாக 08 நோக்கங்கள் தொடர்பிலான 30 உப செயற்பாடுகளை உள்ளடக்கியிருந்ததுடன், இவற்றில் 7 செயற்பாடுகளின் முன்னேற்றம் 0 வீதமான முன்னேற்றத்தைக் கொண்டிருந்ததுடன், 5 செயற்பாடுகளின் முன்னேற்றம் 20 முதல் 50 சதவீதம் வரையாக காணப்பட்டது.

**கையொப்பம் / டபிள்யு.பீ.சீ. விக்ரமரத்ன**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# தேசிய உப்புக் கம்பனி
# 2024 மார்ச் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள்

## தேசிய உப்புக் கம்பனி

## 2024 மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று

| | குறிப்பு | 2024 | | 2023 |
|---|---|---|---|---|
| | | ரூ.ச. | | ரூ.ச. |
| **மொத்த வருமானம்** | | 502,573,939 | | 343,140,970 |
| குறைக்க | | | | |
| பெறுமதி சேர் வரி | | **-** | | **-** |
| தேறிய வருமானம் | | **502,573,939** | | **343,140,970** |
| விற்பனை செலவினம் | | **(217,532,859)** | | **(167,761,852)** |
| மொத்த இலாபம் | | **285,041,080** | | **175,379,118** |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | | **15,735,544** | | **15,579,808** |
| விற்பனை மற்றும் விநியோக செலவினம் | | **(20,880,522)** | | **(6,731,065)** |
| நிருவாக செலவினம் | | **(50,568,685)** | | **(35,180,835)** |
| **செயற்பாட்டு இலாபம் / (நட்டம்)** | | **229,327,416** | | **149,047,026** |
| நிதிசார் வருமானம் | | **58,764,770** | | **43,960,568** |
| நிதிசார் செலவினம் | | **(609,337)** | | **(135,698)** |
| **ஆண்டுக்கான வருமான வரி செலுத்த முன்னரான இலாபம்** | | **287,482,849** | | **192,871,896** |
| வருமான வரிச் செலவினம் | | **(89,253,353)** | | **(58,065,641)** |
| ஆண்டுக்கான வருமான வரிக்குப் பின்னரான இலாபம் | | **198,229,496** | | **134,806,255** |
| ஏனைய விரிவான வருமானம் / செலவினம், தேறிய வரி | | | | |
| இலாபம் அல்லது நட்டக் கூற்றின் பின்னர் மீள் வகைப்படுத்தப்படாத விடயம் | | | | |
| தொழிலின் பின்னரான பயன்களின் மீதான ஆயுட்கால இலாபம் /நட்டம் | | **411,199** | | **(448,686)** |
| குறைக்கப்பட்ட இலாபம் /(நட்டம்) மீது தாக்கம் செலுத்தும் பிற்போடப்பட்ட வரி | | | | **(720,000)** |
| இலாபம் அல்லது நட்டக் கூற்றின் பின்னர் மீள் வகைப்படுத்தப்படும் விடயம் | | | | |
| ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம் /செலவினம், தேறிய வரி | | 198,640,695 | | 133,637,569 |
| ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம், தேறிய வரி | | | | |
| பங்கொன்றுக்கான அடிப்படை உழைப்பு | 10 | 662 | | 470 |

**(பக்கம் 01)**

## தேசிய உப்புக் கம்பனி

## 2024 மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதி நிலைமை பற்றிய கூற்று

| குறிப்பு | | 2024 ரூ. | | 2023 ரூ. |
|---|---|---|---|---|
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் | 11 | 318,550,188 | | 141,149,360 |
| | | 318,550,188 | | 141,149,360 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | | |
| பொருட் பதிவேடு | 12 | 87,682,455 | | 59,421,160 |
| நிதிசார் சொத்துக்கள் | 13 | 333,491,229 | | 272,561,908 |
| வியாபார மற்றும் ஏனைய பெறுகைகள் | 14 | 64,876,202 | | 33,225,220 |
| காசும், காசுக்கு சமமானவையும் | 15 | 18,407,076 | | 77,345,538 |
| | | 504,456,962 | | 442,553,826 |
| **மொத்த சொத்துக்கள்** | | 823,007,150 | | 583,703,186 |
| **உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்** | | | | |
| வெளியிடப்பட்ட மூலதனம் | 16 | 30,000,000 | | 30,000,000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 6,589,500 | | 1,680,000 |
| வருமான ஒதுக்கம் | 17 | 524,895,069 | | 426,713,139 |
| மொத்த உரிமையாண்மை | | 561,484,569 | | 458,393,139 |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | |
| அரச கொடை | 18 | 120,457,434 | | 35,282,026 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு /(சொத்து) | 19 | 18,654,395 | | 16,124,684 |
| ஓய்வூதியப் பயன்களின் கடப்பாடு | 20 | 11,456,371 | | 10,546,833 |
| | | 150,568,200 | | 61,953,543 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | | |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை | 21 | 36,910,349 | | 26,998,301 |
| செலுத்த வேண்டிய / (மீள் அறவிடத்தக்க) வருமான வரி | 22 | 74,044,032 | | 36,358,203 |
| | | 110,954,380 | | 63,356,504 |
| மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள் | | **823,007,150** | | **583,703,186** |

இந்த நிதிக் கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையதாகும்.

------------------------------ 2024/08/29

நிதி முகாமையாளர் திகதி

இந்த நிதிக் கூற்றுக்களை தயார் செய்தல் மற்றும் சமர்ப்பிப்பது தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்புக் கூறுகின்றது. பணிப்பாளர் சபை சார்பாக,

| | பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| பணிப்பாளர் | 1 | ------------------------ |
| பணிப்பாளர் | 2 | ------------------------ |

அங்கீகரித்து கையொப்பமிடப்பட்டது.

பணிப்பாளர் சபை கையொப்பமிட்ட திகதி : 2024.08.29

**(பக்கம் 02)**

# தேசிய உப்புக் கம்பனி

## 2024 மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றம் பற்றிய கூற்று

| | வெளியிடப்பட்ட மூலதனம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | வருமான ஒதுக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2021 மார்ச் 31 ஆம் திகதிக்கான மீதி | 30,000,000 | 2,400,000 | 174,269,603 | 206,669,603 |
| ஆண்டுக்கான தேறிய இலாபம் | | | 60,170,921 | 60,170,921 |
| பங்கிலாபம் செலுத்தல் | | | (3,351,608) | (3,351,608) |
| 2022 மார்ச் 31 ஆம் திகதிக்கான மீதி | 30,000,000 | 2,400,000 | 317,628,964 | **350,028,964** |
| முன்னைய ஆண்டின குத்தகை வாடகை சீராக்கல் - மன்னார் | | | (5,722,080) | (5,722,080) |
| ஆண்டுக்கான தேறிய இலாபம் | | | 134,806,255 | 134,806,255 |
| மீள்மதிப்பீட்டு உழைப்பு மீதான பிற்போடப்பட்ட வரி | | (720,000) | | (720,000) |
| பங்கிலாபம் செலுத்தல் | | | (20,000,000) | (20,000,000) |
| 2023 மார்ச் 31 ஆம் திகதிக்கான மீதி | 30,000,000 | 1,680,000 | 426,713,139 | 458,393,139 |
| மீள்மதிப்பீட்டு உழைப்பு | | 4,909,500 | - | 4,909,500 |
| ஆண்டுக்கான தேறிய இலாபம் | | | 198,229,496 | 198,229,496 |
| பங்கிலாபம் செலுத்தல் | | | (100,000,000) | (100,000,000) |
| 2024 மார்ச் 31 ஆம் திகதிக்கான மீதி | 30,000,000 | 6,589,500 | 524,942,635 | 561,532,135 |

**(பக்கம் 03)**

## தேசிய உப்புக் கம்பனி

## 2024 மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான காசோட்டம் பற்றிய கூற்று

| | 2024 | | 2023 |
|---|---|---|---|
| | ரூபா | | ரூபா |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசோட்டம்** | | | |
| வரி செலுத்த முன்னர் செயற்பாட்டு இலாபம் / (நட்டம்) | 287,482,849 | | 192,871,896 |
| சீராக்கல் | | | |
| தேய்மானம் மற்றும் தேய்வு | 27,698,291 | | 22,323,450 |
| தேய்வு | (14,824,592) | | (14,824,592) |
| சொத்துக்கள் அகற்றல் மீதான இலாபம் | | | (230,350) |
| பணிக்கொடை ஏற்பாடு | 1,831,340 | | 1,219,456 |
| வருமான வரி ஏற்பாடு | | | |
| பதிவழிப்புச் செய்யப்பட்ட அறவிடப்பட வேண்டிய வரி வருமானம் | | | |
| நிலையான வைப்பு வட்டி வருமானம் | (58,216,559) | | (42,841,697) |
| வைப்பு வட்டி வருமானம் | (411,606) | | (19,252) |
| | (43,923,126) | | (34,372,985) |
| **செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் ஆண்டுக்கான செயற்பாட்டு இலாபம்** | **243,559,722** | | **158,498,911** |
| செயற்படு மூலதன மாற்றங்கள் | | | |
| இருப்புப் பதிவேட்டின் மிகை/(குறை) | (28,261,295) | | (37,757,555) |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகளின் மிகை/(குறை) | (31,650,982) | | (231,436) |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தல்களின் மிகை/(குறை) | 9,912,048 | | 10,744,795 |
| | (50,000,228) | | (27,244,196) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம் | 193,559,494 | | 131,254,715 |
| பணிக்கொடை செலுத்தல் | (921,803) | | (315,638) |
| வருமான வரி/ தடுத்துவைத்த வரி செலுத்தல் | (49,241,040) | | (19,330,000) |
| | (50,162,843) | | (19,645,638) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசோட்டம் | 143,396,651 | | 111,609,077 |
| மூதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம் | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | (25,948,088) | | (20,724,021) |
| நிலையான சொத்துக்களை அகற்றல் | | | 230,350 |
| செயற்படு அதிகரிப்பு | (174,076,691) | | (10,386,613) |
| முதலீடுகளை நீக்கிக் கொள்ளல் | | | 214,759,032 |
| நிலையான வைப்புக்களில் முதலீடு | (60,938,500) | | (260,000,000) |
| நிலையான வைப்பு வட்டி வருமானம் | 58,216,559 | | 5,881,528 |
| வைப்புக்கள் மற்றும் வட்டி வருமானம் | 411,606 | | |
| மன்னார் குத்தகை வாடகை | | | (5,722,080) |

| | | | |
|---|---|---|---|
| மூதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசோட்டம் | (202,335,113) | | (75,961,804) |
| | | | |
| நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம் | | | |
| பங்கிலாபம் செலுத்தல் | (100,000,000) | | (20,000,000) |
| அரச ஏற்பாடுகளின் பெறுகை | 100,000,000 | | |
| நிதி நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசோட்டம் | | | (20,000,000) |
| ஆண்டில் காசும், காசுக்கு சமமானவைகளும் தேறிய அதிகரிப்பு | | | |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவைகளும் | (58,938,462) | | 15,670,510 |
| ஆண்டின் இறுதியில் காசும், காசுக்கு சமமானவைகளும் | 77,345,538 | | 61,675,028 |
| | 18,407,076 | | 77,345,538 |
| ஆண்டின் இறுதியில் காசும், காசுக்கு சமமானவைகளினதும் பகுப்பாய்வு | | | |
| வங்கியிலுள்ள காசு | 18,407,076 | | 77,345,538 |

**(பக்கம் 04)**

தேசிய உப்புக் கம்பனி

2024 மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 1. கூட்டிணைத்தல் தகவல்கள்

### 1.1 அறிக்கையிடல் அமைப்பு

தேசிய உப்புக் கம்பனி என்பது இலங்கையில் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் (முழுமையாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கு உரித்தானது) கீழ் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட அரச தொழில்முயற்சிக் கம்பனியொன்றாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கொழும்பு 05, எல்விட்டிகல மாவத்தை இலக்கம் 561/3 எனும் இடத்தில் அமைந்துள்ளதுடன், தலைமை வியாபார நிலையம் கிரான்ட் பஸார், மன்னார் மற்றும் ஆணையிறவு ஆகிய இடங்களில் தாபிக்கப்பட்டுள்ளன.

### 1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின் தன்மை

ஆண்டினுள் கம்பனியின் பிரதான செயற்பாடாக இருந்தது இலங்கையில் உப்பு உற்பத்தியின் நீண்டகால வரலாற்றை முன்னெடுத்துச் செல்வதாகும். மேற்படி கம்பனி சாதாரண உப்பு உற்பத்தி செய்வதுடன், இது அயடீன் கலந்த உப்பு, உப்புக்கட்டி மற்றும் கைத்தொழில் உப்பு என்ற வகையில் இதனை நாடு முழுவதிலும் விநியோகிக்கின்றது.

1.3 இலக்கம் 05 முதல் 42 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு பகுதியாக தொடர்ந்தும் காணப்படுகின்றது.

1.4 ஆண்டின் இறுதியில் ஊழியர்களின் எண்ணிக்கை 57 பேர் ஆவார்கள். (2023-57)

### 1.4 நிதிக் கூற்றுக்களுக்கு தத்துவமளிக்கப்பட்ட திகதி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட திகதி

2024 மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான தேசிய உப்புகம் கம்பனியின் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 2024 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய பணிப்பாளர் சபைப் பிரேரணை நிறைவேற்றத்திற்கு அமைய வெளியிட தத்துவமளிக்கப்பட்டது.

## 2. தயார் செய்வதன் அடிப்படை மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1 பொதுவான கொள்கைகள்

2.1.1 இயைபுக் கூற்று

இந்த நிதிக் கூற்று, இலங்கையின் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்கள் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தகவுதிறன்களுக்கு இணங்க வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ளது. **(பக்கம் 05)**

தேசிய உப்புக் கம்பனி

2024 மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**2.1.2 தயார் செய்வதன் அடிப்படை**

இந்த நிதிக் கூற்று, இலங்கையின் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு இணங்க வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை ரூபா மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல நிதித் தகவல்களும் அண்மித்த ரூபா பெறுமதியில் தரப்பட்டுள்ளன.

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ளன.

தற்கால வெளிப்படுத்தல்களுக்கு அமைய உறுதிப்படுத்தல்களுக்காக தேவையான யாப்புக்களில் நடப்பு ஆண்டுக்கான சமர்ப்பித்தல்களுடன் இணங்கும் வகையில் ஒப்பீட்டு ரீதியாக தகவல்கள் தேவையானவாறு மீள் வகைப்படுத்தப்படவில்லை எனின் மற்றும் வேறு வகையில் வெளியிடப்படவில்லை எனின் கம்பனியினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய ஆண்டின் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்குகின்றன.

**2.1.3 தொடர்ந்தும் நிலைத்திருத்தல்**

பணிப்பாளர்களினால் கம்பனி தொடர்ச்சியாக முன்னோக்கிப் பேணிவருவதன் ஆற்றல் பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவர்கள் அதனை முடிவுறுத்துவதற்கு அல்லது வியாபாரத்தை முடிவுறுத்த எதிர்பார்ப்பதில்லை.

**2.1.4 மதிப்பீடுகள் மற்றும் முடிவுகளை பயன்படுத்தல்.**

கணக்கீட்டுக் கொள்கைகளின் ஈடுபடுத்தல்கள் மற்றும் அறிக்கையிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவின அளவுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்களை மேற்கொள்வதற்கு இலங்கையின் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வது முகாமைத்துவத்தின் தேவைப்பாடாகும். பெறுபேறுகள் மதிப்பீட்டு பெறுபேறுகளிலிருந்த மாற்றமடைய முடியும்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படையாக அமைந்துள்ள கருதுகோள்கள் வரலாற்றுக் கிரயம் மற்றும் அவ்வவ் நிலைமைகளின் கீழ் நியாயமானது என்று நம்பப்படுகின்ற எதிர்கால சம்பவங்கள் பற்றிய எதிர்பார்ப்புக்கள் உட்பட பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளன.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படையாக அமைந்துள்ள கருதுகோள்கள், நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் என்பதன் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும். மதிப்பீடுகள் திருத்தம் செய்யப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் தாக்கத்திற்கு உட்படுகின்ற எந்தவொரு எதிர்காலத்தின் கால எல்லைகளுக்குள் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் இனங்காணப்படும்.

### 2.1.5 செய்பொருள் மற்றும் மொத்த மூலப்பொருள்

ஒவ்வொரு மூலப்பொருட்களுக்கு ஒப்பான வகைகளுக்காகவும் தனித்தனியாக கணக்கறிக்கையில் காட்டப்பட்டுள்ளதுடன், இயற்கையாக அல்லது செயல்ரீதியாக சமனற்ற விடயங்கள் அவை முக்கியமானதாக இருந்தால் அன்றி தனித்தனியாக சமர்ப்பிக்கப்படும்.

### 2.1.6 அறிக்கையிடல் காலத்தின் பின்னர் இடம்பெற்றுள்ள முக்கியமான நிகழ்வுகள்

அறிக்கையிடல் திகதிக்கு பின்னர் இடம்பெறும் நிகழ்வுகளின் பொருண்மயமான தன்மையானது கவனத்திற் கொள்ளப்பட்டிருப்பதோடு, தேவையான சந்தர்ப்பங்களில் நிதிசார் கூற்றுக்களில் பொருத்தமான சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

**(பக்கம் 06)**

## 2023 மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**2.1.7. வரி விதிப்பு**

**2.1.7 (அ) நடைமுறை வரிகள்**

வரி அறவிடுவதற்கான கட்டணம் அடிப்படையாக அமைந்திருப்பது, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டரசிறை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க வரி அறவிடப்படாத பொருட்களுக்கான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த வருமானத்தின் மீதாகும்.

**2.1.7 (ஆ) பிற்போடப்பட்ட வரி விதிப்பு**

பிற்போடப்பட்ட வரி விதிப்பு மூலம் நிதி அறிக்கையிடல் நோக்கம் மற்றும் வரி விதிப்பிற்கான நோக்கம் ஆகியவற்றிற்கான ஆதனத்தின் தொகை மற்றும் பொறுப்புக்களுக்கிடையிலான தற்காலிக வித்தியாசம் அடையப்படுகின்றது. பிற்போடப்பட்ட வரி விதிப்பின் அளவீடானது அறிக்கையிடல் காலப்பகுதியின் நிறைவில் கம்பனி அதன் சொத்துக்களின் மற்றும் பொறுப்புக்களின் தொகையினை ஈடு செய்வதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு பின்பற்றும் பாங்கு முறையே வரிப் பெறுபேறினை பிரதிபலிக்கின்றது.

நடப்பு வரி பொறுப்புகள் மற்றும் சொத்துக்களை ஈடுசெய்ய சட்டப்பூர்வமாக செயல்படுத்தக்கூடிய உரிமை இருந்தால், ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஈடுசெய்யப்படுகின்றன. அதே வரி விதிப்பு நடவடிக்கை அதே வரி விதிப்பு நிறுவனத்தால் விதிக்கப்படும் வரிகள், அல்லது வெவ்வேறு வரி நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு அவை பொருந்தும். நிகர அடிப்படையில் தற்போதைய வரி பொறுப்புகள் மற்றும் சொத்துக்கள் அல்லது அவற்றின் வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஒரே நேரத்தில் உணரப்படும்.

பிற்போடப்பட்ட வரிச் சொத்து என்பது பயன்படுத்தப்படாத வரி இழப்புக்களுக்கும், தற்காலிக வேறுபாடுகளை பயன்படுத்தக்கூடிய எதிர்கால வரிவிதிப்பு இலாபத்திற்கும் கிடைக்கக்கூடியதாக இருக்கும் என்று கருதப்படும் தற்காலிக வேறுபாடுகள். ஒவ்வொரு புகாரளிக்கும் நாளிலும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அதனுடன் தொடர்புடைய நன்மை அடையப்படாது என்று கருதப்பட முடியாத அளவிற்கு குறைக்கப்படுகிறது.

தவறிய வரி சொத்துகள் மற்றும் பொறுப்புகள் வரி விகிதத்தில் அளவிடப்படுகிறது, அவை தற்காலிக வேறுபாடுகளை அவர்கள் திருப்புகையில் தாக்கல் செய்யும் போது, அவை வெளியிடப்பட்ட தேதி அல்லது கணிசமாக நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

**(பக்கம் 07)**

**2.1.8 கடனீட்டு செலவுகள்**

கடனீட்டுச் செலவினம், கடனீட்டுக் காலப்பகுதியில் நிகழும் கடனீட்டுக்காக தாங்கிக்கொள்ளப்பட்ட கடனீட்டுச் செலவு என்றழைக்கப்படும்.

**2.2 சொத்துக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படைகளும்**

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டவை காசு மற்றும் கம்பனியின் வியாபார நடவடிக்கையின் சாதாரண தொழிற்பாட்டின் போது அல்லது அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்குள் காசாக ஆக்கிக் கொள்ள எதிர்பார்க்கப்படுபவை.

நடைமுறையல்லாத சொத்துக்கள் என்பது கம்பனி அறிக்கையிடல் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்கும் அதிகமாக வைத்திருக்க உத்தேசிக்கும் சொத்துக்களாகும்.

**2.2.1 காசும் காசுக்கு நிகரானவையும்**

காசும் காசுக்கு நிகரானவையும் என்பது கையிலுள்ள பணம் என வரைவிலக்கணம் வழங்கப்படுகின்றது, தேவைக்கு ஏற்ப முதலீடு செய்தலும் உயர் திரவத் தன்மை கொண்ட குறைந்த கால முதலீடுகள். காசுப் பாச்சலின் நோக்கம் காசும் அதற்கு சமனாக ஆக்கப்பட்ட கையிலுள்ள பணம், வைப்பிலுள்ள பணம் நிகர வங்கி மேலதிகப் பற்று, குறைந்த கால முதலீட்டின் முதிர்ச்சிகள் வேறுபலவும் முன்று மாத அல்லது காலத்துக்கு ஏற்றவை என்பனவாக வரையறுக்கப்பட்டுள்ளன.

**காசுப்பாச்சல் கூற்று**

காசுப்பாய்ச்சல் கூற்று ''நேரில் முறைமை'' யினைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. வட்டி செலுத்துகை, வட்டி பெறுகை மற்றும் பங்கிலாப பெறுகை என்பன தொழிற்படும் காசுப்பாய்ச்சலாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதேநேரம் பங்கிலாப செலுத்துகையானது காசுப் பாய்ச்சல் கூற்று முன்னிலைப்படுத்தல் நோக்கத்தில் நிதியியல் காசுப்பாய்ச்சலாக வகைப்படுத்தப்படுகின்றது.

**2.2.2 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மதிப்பீடு செய்யப்படுவது திரட்டிய தேய்மானம் மற்றும் திரட்டிய இழப்பீடுகளை குறைத்த பின்னராகும்.

செலவினம் என்பதில், சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கான நேரடியாக தாங்கிக் கொள்ளக்கூடிய செலவினம் உள்ளடங்கும் சுய உருவாக்க சொத்துக்களின் செலவினத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கும்.

**(பக்கம் 08)**

**ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் (தொடர்ச்சி)**

- மூலப்பொருட் செலவினம் மற்றும் நேரடி ஊழியச் செலவினம்;
- ஒரு சொத்து அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டுக்காக செயற்படும் நிலைக்குக் கொண்டுவருவதற்காக நேரடியாகத் தாங்கிக் கொள்ளப்பட்ட எந்தவொரு செலவினமும்;
- ஒரு சொத்தினை அகற்றலுக்காக அல்லது மீண்டும் வேலைத்தளத்தில் தாபிப்பதற்காக கம்பனி கட்டுப்பட்டுள்ள போது பொருட்களின் பகுதிகளை நீக்கம் செய்தல், அவை அமைந்துள்ள இடத்திலிருந்து நீக்கம் செய்தல் மற்றும் மீளத் தாபித்தலுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம்;

குறித்த உபகரணங்களின் செயற்பாட்டுக்கு அத்தியாவசியமாகின்ற கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருட்கள் மேற்படி உபகரணத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்பட்டுள்ளது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் எனும் விடயத்தின் ஒரு பகுதியாக பல்வேறு பயன்களைக் கொண்டதாக பயன்படுத்தப்படக்கூடிய உள்ள பட்சத்தில், அவை ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் தனியான அம்சங்களாக (பிரதான கூறுகளாக) கணிப்பீடு செய்யப்படும்.

அகற்றலின் அடிப்படையில் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (விடயத்தின் அகற்றலின் தேறிய வெளியீடு மற்றும் விடயத்தின் போக்குரத்துச் செலவினத்திற்கு இடையிலான வித்தியாசமாக கணிப்பீடு செய்யப்படும்.) வருமானக் கூற்றில் வேறு செயற்பாட்டு வருமானமாக இனங்காணப்படும். மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் விற்பனை செய்யப்படும் போது, மீள்மதிப்பீட்டின் மிகையை ஒதுக்கங்களில் உள்ள எந்தவொரு நிதியையும் தடுத்துவைக்கப்பட்ட உழைப்புக்களுக்கு மாற்றல் செய்யப்படும்.

**தொடரும் செலவுகள்**

ஆதனம் அல்லது உபகரணங்களின் பொருளொன்றின் அங்கமொன்றினை நிரப்பும் செலவு அந்த பொருளின் கொண்டு செல்லும் தொகையில் அங்கீகரிக்கப்படுகின்றது. இந்த பகுதியில் எதிர்கால பொருளாதார நலன்கள் பொதிந்திருப்பது சாத்தியமாயின் இது கம்பனிக்கான ஏதுவாகக் காணப்படுவதுடன் இதன் செலவு நம்பகமான அளவீடாக இருக்க முடியும். பதிலீடு செய்யப்படும் பொருளின் கொண்டு செல்லல் தொகை அங்கீகரிக்கப்படுவதில்லை. ஆதனம் மற்றும் உபகரணங்களின் நாளாந்தப் பணிகளின் செலவு வருமானக் கூற்றில் தாங்கிக் கொள்ளப்பட்ட செலவினமாக இனங்காணப்பட்டுள்ளது.

**பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்**

பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் அது நிகழ்ந்த நிதிசார் காலப்பகுதியின் விரிவான வருமான நிதிக் கூற்றில் வெளிப்படுத்தப்படும். காணப்படுகின்ற சொத்துக்களின் வினைத்திறன் பற்றி அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு தரநியமத்திற்கு மேலதிகமாக எதிர்கால பொருளாதார பயன்கள் கம்பனிக்கு கிடைக்கும் போது மற்றும் சொத்துக்களில் இனங்காணப்படக்கூடிய பகுதியை புதுப்பித்தலின் போது பிரதான புதுப்பித்தல்களின் செலவினம் பிரதான செலவினத்தில் உள்ளடக்கப்படும். உரிய சொத்துக்களின் எஞ்சிய விளைதிறன்மிக்க ஆயுட்காலம் பிரதான நவீனமயப்படுத்தல்கள் தேய்வு செய்யப்படும்.

**(பக்கம் 09)**

## தேசிய உப்புக் கம்பனி

## 2024 மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**பெறுமானத் தேய்வு**

சொத்துக்கள் மற்றும் எதிர்கால பொருளாதாரப் பயன்கள், உத்தேச பயன்பாட்டு முறை மூலம் மென்மேலும் நெருக்கமாக வெளிப்படுத்தப்படுவதனால் ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் விடயமொன்றின் ஒவ்வொரு பகுதியினதும் மதிப்பீட்டு பயன்படுத்திக் கொள்ளும் காலத்தின் அடிப்படையில் (முனைப்பான ஆயுட்காலம்) நேர் கோட்டு முறை அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் தேய்மானம் இனங்காணப்படுகின்றது. காணிகள் தேய்வு அடைவதில்லை. தற்கால மற்றும் ஒப்பீட்டு ரீதியான காலப்பகுதிகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட முனைப்பான ஆயுட் காலம் பின்வருமாறாகும்.

| ஆதன வகை | அடிப்படை |
|---|---|
| சகல கட்டிடங்களும் | 20 ஆண்டுக்கு மேல் 5% |
| பொறித்தொகுதிகள் மற்றும் நீர்ப்பம்பி | 05 ஆண்டுக்கு மேல் 20% |
| அலுவலக உபகரணம் | 05 ஆண்டுக்கு மேல் 20% |
| சகல தளபாடங்கள் | 10 ஆண்டுக்கு மேல் 10% |
| சகல மோட்டார் வாகனங்கள் | 10 ஆண்டுக்கு மேல் 10% |
| கணினி மற்றும் உதிரிபாகங்கள் | 05 ஆண்டுக்கு மேல் 20% |
| டிரக்டர் | 05 ஆண்டுக்கு மேல் 20% |
| உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | 06 ஆண்டுக்கு மேல் 15% |

தேய்மானம் கணிப்பிடும் முறை, முனைப்பான ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு மற்றும் அட்டுறு அடிப்படையில் தயார் செய்யப்படுகின்றது.

**அமுலில் உள்ள மூலதன நிகழ்ச்சித்திட்டங்கள்**

அமுலில் உள்ள மூலதன நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் செலவினத்திற்கு அமைய வெளிப்படுத்தப்படுகின்றது. இவை ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் மூலதமனமயப்படுத்தலுக்கு காணப்படுகின்ற கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்காக நேரடியாக தாங்கிக் கொள்ளப்பட்ட மூலதன வடிவிலான செலவினங்களாகும். எமது நிறுவனத்தில் அமுலில் உள்ள மூலதன நிகழ்ச்சித்திட்டகங்கள் 2024 மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு மூலதனமயமாக்கப்பட்டுள்ளன.எனவே 2023/2024 ஆண்டில் குறித்த ஆதனங்களுக்கு தேய்மானம் செய்யப்படவில்லை.

## 2.2.3 குத்தகைகள்

### நிதிக் குத்தகைகள்

குத்தவை அம்சத்தின் உரிமைக்கு மேலதிகமாக ஒட்டுமொத்த அபாயம் மற்றும் பயன்களின் விளைதிறனான கம்பனிக்கு மாற்றப்பட்ட நிதிக் குத்தகை மீதான ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள், அவற்றின் விலை மற்றும் ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதற்கமைய மற்றும் இந்த சொத்துக்களைப் பயன்படுத்தி கம்பனி பெற்றுக் கொள்ள உத்தேசித்துள்ள பயன்களைப் பெற்றுக் கொள்ளும் காலப்பகுதிக்குள் தேய்மானத்திற்கு அமைய மூலதனமாக்கப்பட்டுள்ளது.

குத்தகைதாரருக்கு செலுத்தவேண்டிய நிகரான பிரதான தொகை பொறுப்பொன்றாக காட்டப்பட்டுள்ளதோடு, குத்தகை கட்டணங்கள் நிதிக்கட்டணங்களுக்கும் குத்தகை பொறுப்பு குறைப்புக்குமிடையே பகிரட்டப்பட்டுள்ளது. குத்தகை காலத்திற்கு செலுத்தவேண்டிய வட்டியானது தொங்கல் கணக்கில் வட்டிக்கு மாற்றப்பட்டுள்ளது. ஓவ்வொரு நிதியாண்டுக்கும் பிரயோகிக்கத்தக்க வாடகை கடப்பாடுகளின் வட்டி அடிப்படையானது குத்தகை காலத்தில் வருமான கூற்றில் உள்ளடங்குகின்றது.

**(பக்கம் 10)**

**2.2.4 முதலீடுகள் மற்றும் ஏனைய நிதிச் சொத்துக்கள்**

**வகைப்படுத்தல்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9) விடயப்பரப்பில் உள்ள நிதிச் சொத்துக்கள், பின்வரும் அளவுகோள்களுக்கு அமைய வகைப்படுத்தப்படுகின்றன.

**வகுதி :**

நியாயமான பெறுமதி மீது பின்னர் அளவிடப்பட வேண்டிய அம்சங்கள் (வேறு விரிவான வருமானம் மூலம் அல்லது இலாபம் அல்லது நட்டம் மூலம்) மற்றும் கடன்தீர் நிதி விலைக்கு அளவிடப்பட வேண்டியவை என்று வகைப்படுத்தப்படும்.

வகைப்படுத்தல், நிதிச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கான நிறுவனத்தின் வியாபார மாதிரியமைப்பு மற்றும் காசோட்டத்தின் உடன்படிக்கைகளின் நியதிகளில் தங்கியுள்ளது.

நியாயமான பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்ற சொத்துக்களுக்கு இலாபம் மற்றும் நட்டம், இலாபம் அல்லது நட்டம் இன்றேல் வேறு விரிவான வருமானமாக அறிக்கையிடப்படும். வியாபாரத்திற்காக தடுத்துவைக்கப்படாத பங்கு முதலீடுகள் தொடர்பாக இது வேறு விரிவான வருமானம் மூலம் நியாயமான பெறுமதியைக் கொண்டுள்ள பங்குகள், முதலீடுகளுக்கு கணக்கீட்டுக்கு ஆரம்ப அங்கீகாரச் சந்தர்ப்பத்தில் கம்பனிக்கு மாற்றம் செய்ய முடியாத வாய்ப்பு இருந்ததா என்பதன் அடிப்படையில் தங்கியுள்ளது.

கம்பனி கடன் முதலீடுகளை மீண்டும் வகைப்படுத்துவது மேற்படி சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கு அதன் வியாபார மாதிரியமைப்பு மாற்றமடையும் பட்சத்தில் மாத்திரமாகும்.

**அ) அங்கீகாரம் மற்றும் அங்கீகரிக்காமை**

நிதிச் சொத்துக்களை உரிய முறையில் கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்வதானது கம்பனியினால் சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்யப்படுகின்ற வியாபாரத் திகதியிலாகும். நிதிச் சொத்துக்களிலிருந்து நிதி பெற்றுக் கொள்ளும் உரிமை காலாவதியாகி உள்ள பட்சத்தில் அல்லது மாற்றம் செய்யப்பட்டுள்ள போது மற்றும் கம்பனி உரித்தின் சகல அபாயம் மற்றும் பயன்களும் குறிப்பிடத்தக்களவு மாற்றம் செய்யப்பட்டுள்ள போது நிதிச் சொத்துக்கள் அங்கீகரிக்கப்படுவதில்லை.

**ஆ) மதிப்பீடு**

ஆரம்ப இனங்காணலின் போது, கம்பனி நிதிச் சொத்தொன்றை அதன் நியாயமான பெறுமதிக்கு மேலதிகமாக இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான பெறுமதி இல்லாத நிதிச் சொத்துக்கள் தொடர்பாக, நிதிச் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு நேரடியாக குறிப்பிடத்தக்க கொடுக்கல் வாங்கல் செலவினத்தின் பேரில் கணிப்பீடு செய்யப்படும். இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான பெறுமதி மூலம் கொண்டு செல்லப்படுகின்ற நிதிச் சொத்துக்களின் கொடுக்கல் வாங்கல் செலவினம் இலாபம் அல்லது நட்டமாக செலவினமாகும்.

பொருத்தல்கள், கட்டமைப்புக்களை கொண்ட நிதிச் சொத்துக்கள், அவற்றின் காசோட்டங்கள் ஆரம்ப மற்றும் வட்டி மாத்திரம் செலுத்தப்படுகின்றதா என்பதை தீர்மானிக்கும் போது அவை முழுமையாக கவனத்தில் கொள்ளப்படும். **(பக்கம் 11)**

## தேசிய உப்புக் கம்பனி
## 2024 மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**இ) கடன் அம்சங்கள்**

கடன் அம்சங்கள் பிற்காலத்தில் அளவிடுதல், சொத்து முகாமைத்துவத்துக்கான கம்பனியின் வியாபார மாதிரியமைப்பு மற்றும் சொத்துக்களின் காசோட்டப் பண்புகளில் தங்கியுள்ளது. கம்பனியில் தமது அம்சங்களை வகைப்படுத்தும் அளவீட்டு முறைகள் மூன்று காணப்படுகின்றன:

**பெறுமானத் தேய்வு செலவினம்**

உடன்படிக்கைசார் காசோட்ட ஆரம்பக் கொடுப்பனவு மற்றும் வட்டி மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்யும் சந்தர்ப்பத்தில் மேற்படி உடன்படிக்கைசார் காசோட்டத்தை சேர்ப்பதற்கு வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், பெறுமானத் தேய்வு செலவினத்தினால் கணிப்பிடப்படும். இந்த நிதிச் சொத்துக்களின் மூலம் கிடைக்கின்ற வட்டி வருமானம் விளைதிறன்மிக்க வட்டி விகித முறையின் அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு நிதி வருமானத்தில் சேர்க்கப்படும். இனங்காணப்படாமை காரணமாக ஏற்படுகின்ற எந்தவொரு இலாபம் அல்லது நட்டம், இலாபம் அல்லது நட்டமாக நேரடியாக இனங்காணப்பட்டு அந்நியச் செலாவணி இலாபம் மற்றும் நட்டத்துடன் வேறு இலாபம் / (நட்டம்) இல் வெளிப்படுத்தப்படும். குறைக்கப்பட்ட நட்டம், இலாப நட்டக் கூற்றில் தனியான விடயமொன்றாக சமர்ப்பிக்கப்படும்.

**வேறு விரிவான வருமானம் மூலம் நியாயமான பெறுமதி**

உடன்படிக்கைசார் காசோட்ட ஆரம்பக் கொடுப்பனவு மற்றும் வட்டி மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்யும் சந்தர்ப்பத்தில் மேற்படி உடன்படிக்கைசார் காசோட்டத்தை சேர்ப்பதற்கு வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், வேறு விரிவான வருமானம் ஊடாக நியாயமான பெறுமதி அளவிடப்படும். இலாபம் அல்லது நட்டமாக இனங்காணப்பட்ட இலாபம் அல்லது நட்டம், வட்டி வருமானம் மற்றும் அந்நியச் செலாவணி இலாபம் மற்றும் நட்டம் குறைத்தலை இனங்காண்பதற்கு தவிர குறித்த பெறுமதியின் மாற்றமடைதல் வேறு விரிவான வருமானம் மூலம் கொள்ளப்படும். நிதிச் சொத்துக்களை இனங்காணாத பட்சத்தில், வேறு விரிவான வருமானம் மூலம் முன்னதாக இனங்காணப்பட்டுள்ள திரட்டிய இலாபம் அல்லது நட்டம் பங்குகளிலிருந்த இலாபம் அல்லது நட்டத்திற்கு மீண்டும் வகைப்படுத்தப்படுவதுடன், வேறு இலாபம் / (நட்டம்) இல் இனங்காணப்படும். இந்த நிதிச் சொத்துக்களிலிருந்து கிடைக்கின்ற வட்டி வருமானம் விளைதிறன்மிக்க வட்டி விகித முறையினை பயன்படுத்தி நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படும். அந்நியச் செலாவணி, இலாபம் மற்றும் நட்டம், வேறு இலாபம் / (நட்டம்) இல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், செலவினத்தைக் குறைப்பது இலாப நட்டக் கூற்றில் தனியான விடயமொன்றாக சமர்ப்பிக்கப்படும்.

**இலாபம் அல்லது நட்டம் மூலமான நியாயமான பெறுமதி**

பெறுமானத் தேய்வு செலவினம் அல்லது வேறு விரிவான வருமானம் ஊடாக நியாயமான பெறுமதிக்குரிய தகவுதிறன்கள் பூர்த்தி செய்யப்படாத பட்சத்தில் சொத்துக்கள், இலாபம் அல்லது நட்டத்தில் நியாயமான பெறுமதியின் மீது அளவிடப்படும். இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயமான பெறுமதி மீது பின்னர் அளவிடப்படுகின்ற கடன் முதலீட்டு இலாபம் அல்லது நட்டம், இலாபம் அல்லது நட்டமாக இனங்காணப்பட்டு இது எழுகின்ற காலப்பகுதிக்குள் வேறு இலாபம் / (நட்டம்) இல் வெளிப்படுத்தப்படும்.

**(பக்கம் 12)**

**ஈ) குறைத்தல்**

ஏனைய விரிவான வருமானம் மூலம் நியாயமான பெறுமதி மற்றும் தேய்மான செலவினத்தின் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற கம்பனியின் கடன் அம்சங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட உத்தேச கடன் நட்டங்கள் எதிர்கால நோக்கின் அடிப்படையில் கம்பனி விலைமதிப்புச் செய்கின்றது. அமுலில் உள்ள குறைக்கும் முறையியல், கடன் அபாயத்தில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு இடம்பெற்றுள்ளதா என்பதில் தங்கியுள்ளது. ஆரம்ப நிதி உபகரணம் மற்றும் நிதி சொத்துக்கள், வியாபாரத்திற்காக முதிர்ச்சியடையும் வரை வைத்திருக்கும் நிதிச் சொத்துக்கள், கடன் மற்றும் கிடைக்க வேண்டிய தொகை மற்றும் விற்பனை செய்யவுள்ள நிதிச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. கம்பனி ஆரம்ப இனங்காணலின் போது அதன் நிதிச் சொத்துக்களை வகைப்படுத்த தீர்மானிக்கின்றது.

**கடன் மற்றும் பெறுகை**

கடன் மற்றும் கிடைக்க வேண்டிய நிதி என்பதில், நிதி மற்றும் குறுங்கால வைப்புக்கள், நிலையான வைப்புக்கள் மற்றும் வியாபார மற்றும் ஏனைய பெறுகைகள் உள்ளடங்கும். இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான பெறுமதியைக் கொண்டுள்ள நிதிச் சொத்துக்கள் தவிர, சகல நிதி அம்சங்களும் ஆரம்பத்தில் அளவிடப்படுவது அவற்றின் நியாயமான பெறுமதி மற்றும் கொடுக்கல் வாங்கல் செலவினத்தின் அடிப்படையிலாகும். கடன் மற்றும் பெறுகை என்பது முனைப்பான சந்தையில் விலை குறிப்பிடப்படாதுள்ள நிலையான அல்லது தீர்மானம் செய்யப்பட்டத்தக்க கொடுப்பனவைக் கொண்ட கட்டமைப்பல்லாத நிதிச் சொத்துக்களாகும். ஆரம்ப அளவீடுகளின் பின்னர், அவ்வாறான நிதிச் சொத்துக்கள் பின்னர் தேய்மானத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும். குறைத்தல் காரணமாக ஏற்படுகின்ற நட்டம் விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது.

**நிதிசார் பொறுப்புக்கள்**

நிதிசார் பொறுப்புக்கள், ஒப்பந்த உடன்படிக்கையின் உள்ளடக்கம் மற்றும் நிதிசார் பொறுப்புக்களின் வரைவிலக்கணத்திற்கு இணங்க இலாபம் / நட்டம் அல்லது வேறு நிதிசார் பொறுப்புக்கள் ஊடாக நியாயமான பெறுமதியைக் கொண்ட நிதிப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான பெறுமதியுடன் அறிக்கையிடப்படுகின்ற நிதிப் பொறுப்புக்கள் தவிர, சகல நிதி அம்சங்களும் ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்படுவது அவற்றின் நியாயமான பெறுமதி மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையிலாகும். வட்டியுடனான கடன் மற்றும் கடன் பெறுதல் மற்றும் ஏனைய நிதிசார் பொறுப்புக்கள் (வியாபாரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்) உட்பட நிதிப் பொறுப்புக்கள் ஆரம்பத்தில் அளவிடப்படுவது, கொள்வனவுக்கான நேரடியாக உள்ளடக்கப்படக்கூடிய நியாயமான பெறுமதியைக் கொண்ட குறைந்த கொடுககல் வாங்கல் செலவினத்தின் மூலமாகும் என்பதுடன் பின்னர் விளைதிறன்மிக்க வட்டி விகித முறையைப் பயன்படுத்தி தேய்மானம் செய்யப்பட்ட செலவினத்தின் அடிப்படையில் அளவிடப்படும். தேய்மான செலவினம் மதிப்பீடு செய்யப்படுவது. வெளியீட்டின் ஏதேனும் கழிவு அல்லது அதிக விலை மற்றும் விளைதிறன்மிக்க வட்டி விகிதத்தின் கட்டாய அம்சமொன்றான செலவினத்தைக் கவனத்தில் கொண்டாகும்.

நிதிப் பொறுப்பொன்று, பொறுப்பின் கீழ் உள்ள கடப்பாடு நீக்கப்படும் பட்சத்தில் அல்லது ரத்துச் செய்யப்படும் பட்சத்தில் அல்லது முதிர்ச்சியடையும் போது இனங்காணப்படுவதில்லை. காணப்படுகின்றி நிதிப் பொறுப்பொன்று குறித்த தரப்பினரின் வேறு ஆட்களினால் குறிப்பிடத்தக்களவு வித்தியாசமான நிபந்தனைகளின் பேரில் மீளத்தாபிக்கப்படும் போது அல்லது காணப்படுகின்ற பொறுப்பொன்றின் நியதிகள் குறிப்பிடத்தக்களவு மாற்றம் செய்யப்படும் போது அவ்வாறான பரிமாற்றம் அல்லது மாற்றம் செய்தல் ஆரம்ப பொறுப்பொன்றாக இனங்காணப்படாமை மற்றும் புதிய பொறுப்பொன்று இனங்காணப்படல் என கருதப்படும். ஆரம்ப நிதிப் பொறுப்பின் நியாயமான பெறுமதி மற்றும் செலுத்தப்பட்டது கவனத்தில் கொள்ளப்படுவதுடன், வித்தியாசம் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

### 2.2.4 பொருட் பதிவேடு

பொருட் பதிவேட்டு செலவித்திலும் பார்க்க குறைவான மற்றும் தேறிய அட்டுறு பெறுமதி அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றது. முதலில் உள்வரும் விடயம் மற்றும் முதலில் வெளியேறும் விடயத்தின் அடிப்படையில் செலவினம் மதிப்பீடு செய்யப்படும் என்பதுடன், மூலதனப் பொருட்களின் கொள்வனவுக்கு மற்றும் அவற்றை தற்போதைய நிலைமைக்கு கொண்டு வருவதற்கு மற்றும் தற்போது அமைந்துள்ள இடத்திற்குக் கொண்டுவருவத்றகு தாங்கிக் கொள்ளப்பட்ட சகல செலவினங்களும் உள்ளடங்கும். செலவினம் என்பதில் சகல நேரடி செலவினங்கள் மற்றும் பொதுப் பணிகளுக்கான செலவினம் உள்ளடங்கும். அமுலில் உள்ள வேலைகள் செலவினத்தின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படும்.

### 2.2.5 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

நிுத நிலைமை பற்றிய கூற்றில் நடைமுறை பொறுப்பாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்களாக இருப்பது கோரிக்கையின் பேரில் செலுத்த வேண்டிய அல்லது அறிக்கையிடப்பட்ட திகதி முதல் ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய கடப்பாடுகளாகும். நடைமுறை அல்லாத பொறுப்பாக வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புக்களாக இருப்பது அறிக்கையிடப்பட்ட திகதி முதல் ஒரு வருடம் பூர்த்தியடைந்த பின்னர் நிறைவடையும் பொறுப்புக்களாகும்.

நிதிக் கூற்றுக்களை தயார் செய்யும் போது இனங்காணப்பட்ட சகல பொறுப்புக்களும் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. வரலாற்று சம்பவமொன்றின் பெறுபேறாக கம்பனிக்கு அர்த்தப்பூர்வமான அல்லது சட்ட ரீதியான கடப்பாடு உள்ள போது ஏற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் இனங்காணப்படுவதுடன், பொருளாதார பயன்கள் வெளியேறுவதற்கு பொறுப்புக்களை தீர்த்து வைப்பது அவசியப்பட முடியும்.

### 2.2.5.1 ஓய்வூதியக் கடப்பாடுகளின் பயன்கள்

(அ) ஓய்வூதியக் கடப்பாடுகளின் பயன்கள் - பணிக்கொடை

பணிக்கொடை என்பது பொருட்கோடல் செய்யப்பட்டுள்ள பயன்கள் திட்டமொன்றாகும். இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முறைகள் மற்றும் முறையியல்களை அடிப்படையாகக் கொண்டு நிதி நிமைக் கூற்றில் ஏற்பாடுகள் முன்கொண்டு செல்லப்படும். அவ்வாறாயினும் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் கீழ் ஒரு ஊழியர் தொடர்பாக பொறுப்பு எழுவது ஊழியர் ஐந்து வருட காலம் தொடர்ச்சியான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னராகும்.

(ஆ) பொருட்கோடல் செய்யப்பட்ட பங்களிப்பு திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

பொருட்கோடல் செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது, சேவைக்காலத்தின் பின்னரான பயன்கள் திட்டமாகும் என்பதுடன், இதன் கீழ் ஒரு நிறுவனம் வேறொரு நிறுவனத்திற்கு நிலையான பங்களிப்புத் தொகைகளை செலுத்துவதுடன், மேலதிக தொகைகளை செலுத்த சட்ட ரீதியான அல்லது காத்திரமான கடப்பாடு இல்லை. சகல ஊழியர்களையும் உள்ளடக்கியதாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கான பங்களிப்புக்கான கடப்பாடு, இலாபம் அல்லது நட்டத்துக்காக தாங்கிக் கொள்ளப்பட்ட செலவினமாக இனங்காணப்படுகின்றது.

ஊழியர்களின் மொத்த சம்பளத்திலிருந்து முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 12% உம், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% ஊம் கம்பனியின் பங்களிப்புத் தொகையாக செலுத்தப்படுகின்றது.

(பக்கம் 13)

## தேசிய உப்புக் கம்பனி

## 2024 மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**2.3 விரிவான வருமானக் கூற்று**

**2.3.1 வருமானங்களை இனங்காணல்**

கம்பனிக்கு பொருளாதார பயன்கள் வரும் வரை வருமானம் இனங்காணப்படுவதுடன், வருமானம் மற்றும் அதற்காக தாங்கிக் கொள்ளப்பட்ட அல்லது தாங்கிக் கொள்ள வேண்டி ஏற்படுகின்ற செலவினத்திற்கு அமைய நம்பகத்தன்மையுடன் அளவிடப்பட முடியும். வியாபாரக் கழிவு மற்றும் விற்பனை வரிகளிலிருந்து கிடைத்துள்ள அல்லது கிடைக்க வேண்டிய தேறிய பெறுமதியின் அடிப்படையில் வருமானம் அளவிடப்படுகின்றது. வருமானத்தை இனங்காண்பதற்காக பின்வரும் விசேட தகவுதிறன்கள் பயன்படுத்தப்படும்.

(அ) நுகர்வோருக்கு உரித்து மற்றும் அபாயம் மாற்றப்பட்டுள்ள போது அல்லது நுகர்வோருக்கு சேவை வழங்கப்பட்டுள்ள போது, வருமானம் பிரதானமாக அட்டுறு அடிப்படையில் இனங்காணப்படும்.

(ஆ) ஏனைய வருமானம்

ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்படும்.

(இ) அரசின் ஏற்பாடுகள்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 24.4 ஆம் பிரிவுக்கு அமைய அரசின் ஏற்பாடுகள் வருமானமாக இனங்காணப்படுகின்றன.

2.3.2 செலவினங்களை இனங்காணல்.

வருமானக் கூற்றில் செலவினங்களை இனங்காண்பதானது, விசேட வருமான விடயமொன்றின் உழைப்பு மற்றும் தாங்கிக் கொள்ளப்பட்ட செலவினத்திற்கு இடையே நேரடித் தொடர்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். வியாபாரத்தை பேணிவருவதற்கு மற்றும் ஆதனங்கள், பொறி மற்றும் இயந்திரசாதனங்களை வினைத்திறன்மிக்க நிலையில் பராமரிப்புச் செய்வதற்காக தாங்கிக் கொள்ளப்பட்ட சகல செலவினங்களும் ஆண்டுக்கான இலாபத்தை கணிப்பீடு செய்யும் போது வருமானத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

உப்பளங்களை புனரமைப்புச் செய்வதற்காக அரசிடம் கிடைத்த ஏற்பாடுகள் செலவினத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

**(பக்கம் 14)**

2.4 அறிக்கையிடப்பட்ட காலஎல்லை

நிதி அறிக்கை, 2023 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குத் தயார் செய்யப்பட்டுள்ளது.

**2.5 வெளிப்படுத்தல்கள்**

**2.5.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

நீண்ட காலமாக எமது உற்பத்திச் செயன்முறை தொடர்பான விபரங்கள் தேசிய உப்புக் கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆணையிறவு மற்றும் மன்னார் உப்பளங்ளின் இயந்திரசாதன நிலையங்களின் இலாபம் குறிப்பிடப்படவில்லை என்பதுடன். மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைகள், மூலப் பொருட்கள், முடிவுப் பொருட்கள் மற்றும் செலவினத்தை மையமாகக் கொண்ட பொதுப் பணிச் செலவினம் சமர்ப்பிக்கப்படவில்லை. தேசிய உப்புக் கம்பனியின் எமது பிரதான பணியாக இருப்பது உப்பு உற்பத்தி செய்தல் மற்றும் விநியோகிப்பதாகும். எனவே, எமது நிதிக் கூற்றுக்களை வினைத்திறனுடன் சமர்ப்பிக்க தேசிய உப்புக் கம்பனி மேற்கொள்கின்ற முயற்சிகளில் உற்பத்திச் செயன்முறையும் உள்ளடங்கும் என்பதுடன், மேலும் அதன் பெறுபேறாக இருப்பது உயர் முகாமைத்துவத்துக்கு தீர்மானம் மேற்கொள்ள தகவல் பெற்றுக் கொடுப்பதாகும். ஆணையிறவு உப்பளத்தின் இயந்திர நிலையம் மற்றும் மன்னார் உப்பளத்தின் இயந்திர நிலையத்திற்கு தனித்தனியாக வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்குகள் தயார் செய்யப்பட்டுள்ளன. இது உயர் மட்ட முகாமைத்துவத்துக்கு மற்றும் அரச உரிமையாளர்களுக்கு தீர்மானம் மேற்கொள்வதற்கு பயன்வாய்ந்தாக அமையும்.

**2.5.2 குத்தகை செலுத்தல் - குத்தகைக்குப் பெற்றுக் கொண்ட காணி – மன்னார்**

மன்னார் காணிக்கு குத்தகை தொகையாக ரூபா 6,115,000.00 ஆன தொகை செலுத்த பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. மேற்படி கொடுப்பனவுத் தொகை மன்னார் பிரதேச செயலகத்திற்கு 2013-2023 வரை செலுத்தப்பட்டுள்ளது.

**(பக்கம் 15)**

**2.5.3 ஆணையிறவு காணியின் குத்தகை உடன்படிக்கை மற்றும் அதன் நடைமுறை விடயங்கள்**

அரச அலுவலர்களுடன் மீளாய்வு மற்றும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல். பணிப்பாளர் சபை உடன்படிக்கையொன்றை செய்துகொள்வது தொடர்பிலான பொறுப்பைக் கொண்டுள்ளதுடன், இதனை உறுதி செய்கின்றது. இந்த சொத்துக்கள் உண்மையில் சிறிய அளவிலான கைத்தொழில் அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டு பின்னர் வரையறுக்கப்பட்ட தேசிய உப்புக் கம்பனியிடம் சாட்டுதல் செய்யப்பட்டது. அறிக்கையிடப்படாத சொத்துக்கள் தகுந்த பெறுமதிக்கு அமைய விலைமதிப்புச் செய்யப்பட்டு இனங்காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், அது தொடர்பில் எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

